Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038

(சி/2485)

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 09 (25.09.2004) சனிக்கிழமை இதழ்:360

# சமாதான முயற்சிகளுக்கு ஐ.நா. பூரண ஒத்துழைப்பு!

## ஜனாதிபதி சந்திரிகாவிடம் கொபி அனான் தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்**

**ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா நேற்றுமுன்தினம் ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் – செயலாளர் நாயகம் கொபி அனானைச் சந்தித்துப் பேசினார்.**

இந்தச் சந்திப்பின்போதே கொபி அனான்- இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஐ.நாவின் பூரண ஆதரவு கிடைக்குமெனத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக தாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா, ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு இந்தச் சந்திப்பின்போது விளக்கிக் கூறினார்.

அத்துடன் ஐ.நா. சபையின் விதிமுறைகளை தனது அரசாங்கம் உரியமுறையில்

(12 பக்கம் பார்க்க)

## றொறன்ரோவில் இன்று பொங்கு தமிழ் நிகழ்வு!




கனடாவின் றொறன்ரோ நகரில் இன்று பொங்கு தமிழ் நிகழ்வுகள் பெரும் எழுச்சியுடன் நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

முன்னர் குறிப்பிட்டபடி மாலை 4 மணிக்குப் பதிலாக பிற்பகல் 2 மணிக்கே நிகழ்வுகளை ஆரம்பிப்பதன் மூலம் விரைவில் நிகழ்வுகளை முடித்துவிடக்கூடிய முறையில் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

செப்ரெம்பர் மாத இறுதி நாட்களில் மாலை 6 மணிக்குப் பின்னர் மெல்லிய குளிர்காற்று

(12 பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரிட்சை முடிவுகள் வெளியாகின

கடந்தமாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை தேர்வு முடிவுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டன. நேற்றிரவு பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட பெறு பேறுகள் எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றிரவு வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் இ.பிரணவன் 182 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் 102 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாகவும் நாளை பாடசாலையில் பெறுபேறுகளை பார்வையிடலாம் என்றும் அதிபர் தெரிவித்தார்.

# றெஜி குழுவினர் மீதான தாக்குதலை ஜெயந்தன் படையணியே நடத்தியது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பொலனறுவை மாவட்ட எல்லைப்புற காட்டுப் பகுதியில், இராணுவத்துடன் சேர்ந்து இயங்கிய கருணா குழு மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல், விடுதலைப் புலிகளின் ஜெயந்தன் படை அணியினரால் மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறை நேற்று மாலை ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் -

அண்மைக் காலத்தில் தேசவிரோத செயல்களில் ஈடுபட்டுவந்த கருணாவின் சகோதரரான றெஜி மற்றும் துமிலன், எழிலன் ஆகியோர் காடுகளில் தேடியழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் ஜெயந்தன் படையணியினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்து தொடர் இலக்கம் அழிக்கப்பட்ட ஆயுதங்கள், தொலைத் தொடர்பு கருவிகள், சில அதிகாரிகளுடனான தொடர்புகள் பற்றிய முக்கிய ஆவணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் மாதுறுஓயா குளத்திற்கு அருகிலிருக்கும் காட்டுப் பகுதியில் கடந்த ... இடங்களை நோக்கித் தப்பியோடியுள்ளனர்.

ஜெயந்தன் படையணி நடவடிக்கைக் குழுவினர் தொடர்ந்தும் காடுகளை சல்லடை போட்டு தேடிவருகின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - றெஜி தனது ஆயுதக் குழுவைச் சேர்ந்த சிலருடன் மாதுறுஓயா காட்டுப் .பகுதியில் தங்கியிருந்தபோதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

மாதுறுஓயா குளத்துக்கு அருகேயுள்ள மலைக்குன்றின் அடிவாரத்தில் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



மக்கள் புரட்சி வெடிக்கட்டும் அது நிச்சயமாகத் தமிழீழத்தை எமது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து வீரச்

யிடலாம் என்றும் அதிபர் தெரிவித்தார். | வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தத்



**மக்கள் புரட்சி வெடிக்கட்டும் அது நிச்சயமாகத் தமிழீழத்தை எமது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து வீரச் சாவடைந்த ஏனைய மாவீரர்களுடன் சேர்ந்து நானும் பார்த்து மகிழ்வேன்.**

*– தியாகி திலீபன்*

என்பன கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் மாதுறுஓயா குளத்திற்கு அருகிலிருக்கும் காட்டுப் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதி காலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அவர் களுடனிருந்த வேறு சிலர் பாதுகாப்பான

அமைத்துத் தங்கியிருந்த இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட றெஜியிடமிருந்து அவரது பாஸ்போர்ட் மற்றும் அடையாள அட்டை என்பனவும்

(12 பக்கம் பார்க்க)

# போர் தவிர்ந்த வழி மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு!

## பி.பி.சி. பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா



(லண்டன்)

சமாதான முயற்சிகள் முடங்கியிருக்கும் நிலையில் மீண்டும் போர் தொடங்குவதற்கான சாத்தியங்கள் எதுவும் தென்படவில்லை. இந்தப் பிரச்சினைக்கு போர் தவிர்ந்த வழிமுறை மூலம் தீர்வுகாண்பதில் அர சாங்கம் முழுமையான உறுதிப்பாட்டுடன் இருக்கிறது என - ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

ஐ.நா. கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா, பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்தப் பேட்டியில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகள் சிலவும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு -

கேள்வி: இலங்கையில் சமாதான வழிமுறைகள் முடங்கியிருக்கும் இந்த நிலையில் மீண்டும்போர் தொடங்குவதற்கான அபாயம் இருக்கிறதா?

பதில்: அது அவ்வளவு சாத்தியமாகத் (12 பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகள் குறித்து பீற்றர்சனுடன் சந்திரிகா பேச்சு!

(நியூயோர்க்)

தமிழீழ விடுதலைப் புலிகளு டன் அதிகாரப் பகிர்வை ஏற்படுத் திக் கொள்வதற்கான இணக்கப் பாட்டை தமது அரசாங்கத்தால் காண முடியும் என நம்புவதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலு வலகத்தில் நோர்வே வெளிவிவ கார அமைச்சர் ஜான் பீற்றர்சனை நேற்று முன்தினம் சந்தித்தபோதே

(12 பக்கம் பார்க்க)

## றெஜியுடன் பலியான

# நால்வரின் விபரங்களை இராணுவம் வெளியிட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பொலனறுவ மாவட்ட எல்லைப் பகுதியிலுள்ள மாதுறு ஓயா காட்டுப்பகுதியில் விடு தலைப் புலிகளால் கருணா அணி யினர் மீது நடத்தப்பட்ட தாக்குத லில் கருணாவின் சகோதரர் றெஜி யுடன் மேலும் நால்வர் கொல்லப் பட்டதாக இராணுவத்தரப்பு தகவல்

(12 பக்கம் பார்க்க)





**இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...**

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

*Your friend in the skies...*

# நீர் விரயமாவதைக் கட்டுப்படுத்த; புதிய சட்டம் அமுல்படுத்த ஏற்பாடு!

## விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வில் அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விவசாயத்துக்கு மேலதிகமாக நீர் பயன்படுத்தப்படுவதினால் நீர் விரயமாகிறது. நிலக்கீழ் நீர்மட்டம் குறைவடைகிறது. இதனைக் கருத்தில் கொண்டு நீர் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டமொன்றினைக் கொண்டுவருதற்கு தாம் நடவடிக்கை எடுத்துவருவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் சிறந்த முறையில் விவசாயத்தில் ஈடுபட்ட 80 விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அரச அதிபர் - தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கும் 80 விவசாயிகள் உண்மையில் பாராட்டப்படவேண்டியவர்கள். இந்த விவசாயிகள் நவீன முறையில் சிக்கனமாக உற்பத்திகளை மேற்கொள்ள அவர்களை வழிநடத்திச் செல்கின்ற விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி திணைக்களம் என்பவற்றின் உத்தியோகத்தர்களையும் பாராட்டினார்.

எமது நாட்டில் கிடைக்கின்ற உள்ளீட்டுப் பொருட்களுக்கு அமைய எமது விவசாய முறைகள் மாற்றமடைய வேண்டும்.

கடந்த காலத்தில் பல்வேறு சூழ்நிலைக்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டு இன்றும் விவசாயத்தினை அழிந்து போகாது, செயற்படுத்தி வருகின்றமை போற்றத்தக்கது. இன்று விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் யாழ்.மாவட்டத்துக்கு 20 வீதம் வரையே பயன்படுகின்றது. மிகுதி வெளிமாவட்டத்துக்காகவும் உற்பத்தி செய்யப்படுகிறது.

இலங்கையில் சிறுபோகம், பெரும்போகம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டு விவசாய உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றபோது - யாழ். குடாநாட்டு விவசாயிகள் தொடர்ச்சியாக விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

பிற மாவட்டத்தில் நீரின் அளவினை தகுந்த முறையில் பேணுகின்றார்கள். இந்தநிலை குடாநாட்டில் இல்லை. இதனைவிட, விவசாயிகள் பயன்படுத்தும் கிருமிநாசினிகள், உரவகைகள் என்பன நீரை மாசடையச் செய்கின்றது. இதனை மக்கள இன்று பயன்படுத்துவதனால், புதிய நோய்கள் பல உருவாகின்றது. இதனை நாம் கட்டுப்படுத்தி இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆளுநர்சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.மாவட்டக் கிளையின் ஆளுநர் சபையின் கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு, அந்தக்கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா தலைமையில், கிளை அலுவலகத்தில் நடைபெறும். சகல உறுப்பினர்களையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (64)

### குழுக்கூட்டம்

கல்வி தொழிலாளர்களின் தலை மையகத்தின் குழுக்கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு இல.18/3 சுவர்ணா வீதி, கொழும்பு - 06 இல உள்ள போருக்கெதிரான தேசிய முன்னணி காரியாலயத்தில் நடை பெறவுள்ளதாக கல்வி ஊழியருக்கான நிறுவனத் தலைவர் அப்துல் அசீஸ் தெரிவித்தார்.

### ஆன்மீக சொற்பொழிவு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான வளாகத்தில் உள்ள பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடந்துவரும் ஆன்மீகச் சொற்பொழிவு நாளை இதிகாசங்களில் நட்பு எனும் தலைப்பில் ஹாட்லிகல்லூரி ஆசிரியர் சதா.யாதவானந்தம் உரை நிகழ்த்தவுள்ளார். (14)


## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

ரோஸ், ரசம், நன்னாரிரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)


### திலீபன் நினைவு தினத்தையொட்டி

# கூட்டுறவுச்சபை அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட இலக்கிய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை -

கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களிடையே நடத்திய இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு -

**கட்டுரை (பணியாளர்)**

முதலாம் இடம்: கி.வரதராசன் - அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

இரண்டாம் இடம்: தே.தவராஜா - கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

மூன்றாம் இடம்: தா.தவச்செல்வன் - கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

**பேச்சு (பணியாளர்)**

முதலாம் இடம்: தே.தவராஜா - கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

இரண்டாம் இடம்: செ.கென்றிலிஸ்மன - ஊர்காவற்றுறை ப.நோ. கூ.சங்கம்.

மூன்றாம் இடம்: சி.மனோரஞ்சன் - வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்.

**கவிதை (பணியாளர்)**

முதலாம் இடம்: செ.செல்வக்குமார் - நல்லூர் ப.நோ.கூ. சங்கம்.

இரண்டாம் இடம்: சூ.யேசுதாசன- யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்.

மூன்றாம் இடம் சு.சிறீகாந் - அச்சுவேலி ப்.தெ.வ.அ.கூ.சங்கம்.

**கவிதை (அங்கத்தவர்)**

முதலாம் இடம்: விஜித்விமல்ராஜ் கசில்டா - பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ. கூ.சங்கம்.

இரண்டாம் இடம்: வைரவநாதன் மைதிலி - மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கம்

மூன்றாம் இடம்: நடேசன் செந்தமிழ்ச்செல்வி - புலோலி ப.நோ.கூ. சங்கம்.

**வினாடி வினா (பணியாளர்)**

முதலாம் இடம்: வலிகாமம் ப.தெ. வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி.

இரண்டாம் இடம்: வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்.

மூன்றாம் இடம்: ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.

**நாடகம் (பணியாளர்)**

முதலாம் இடம்: வலிகாமம் ப.தெ. வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி.

### பரிசளிப்பு விழா

(நவிண்டில்)


யாழ்.இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி. ந.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறும்.


இந்தவிழாவில் - யாழ்.மாவட்ட பொறியியலாளர் கு.சிவபாலன் பிரதமவிருந்தினராகவும், வடமராட்சி கல்வி வலய நிர்வாகப் பிரிவுகளுக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் அருளானந்தம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

### சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு விழாவின் சில காட்சிப் பதிவுகள்



நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்


விவசாயி ஒருவருக்கு பரிசு வழங்கும் அரச அதிபர்


பரிசுபெற்ற விவசாயிகள் அமர்ந்திருப்பதைக் காணலாம்

# சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே இலக்கியப் போட்டி

சர்வதேச சிறுவர் முதியோர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் ஆதரவுடன் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் கவிதை, கட்டுரைப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

முதியோர் வாரத்தை முன்னிட்டு 'முதியோரைப் பேணுவோம்' எனும் தலைப்பில் கீழ்ப்பிரிவு, கனிஷ்ட பிரிவு, மேற்பிரிவு பாடசாலைகளிடையே கவிதைப்போட்டியும் நடைபெறவுள்ளது.

சிறுவர் தினத்தை முன்னிட்டு, 'பிள்ளைகளுக்கான சிநேகபூர்வ சமூகத்தை கட்டி எழுப்புவோம்' எனும் தலைப்பில் கீழப்பிரிவு, கனிஷ்டபிரிவு, மேற்பிரிவு மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியும், கனிஷ்டபிரிவு மேற்பிரிவுக்கு கவிதைப்போட்டியும் நடைபெறும்.

மேற்படி போட்டிகளில் முதல் இடத்தை பெற்ற மாணவர் விபரத்தை வலயக்கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்தார். (29)


## கணக்கியல் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

கணக்கியல் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகளைப் பொருத்தமான ஆண்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வித்தகைமை :**

01. கல்வித்தகைமை - க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதப் பாடங்களில் தேர்ச்சியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

02. அகவை - 16 தொடக்கம் 21 வரை.

*குறிப்பு :*

01. வேண்டுகை முடிவு நாள் : 05.10.2004.

02. நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள் : 09.10.2004 காலை 9.00 மணி.
இடம் :- கிளி/மத்திய கல்லூரி,
ஏ-9 வீதி,
கிளிநொச்சி.

04. நேர்முகத்தேர்வுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும், அவற்றின் நிழற்படப் படிகைகளையும் கொண்டு வருக.

05. பயிற்சி காலத்தில் 4000/- ரூபா உதவிக்கொடுப்பனவுடன் தங்குமிட வசதி வழங்கப்படும்.

06. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.

07. பயிற்சி நெறிக்காலம் :- ஓர் ஆண்டு.

08. பயிற்சியின் பின் நிதித்துறை நிறுவனங்களில் ஐந்து ஆண்டுகள் பணியாற்ற வேண்டும்.

09. பயிற்சியின் நிறைவில் தகைமைச்சான்றிதழுடன் பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறையின் சம்பளத்திட்டத்திற்கமைவாகச் சம்பளம் வழங்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி.

(C/2862)

## The Royal College of Jaffna

ஆங்கிலத்தில் சுலபமாக 6 மாத காலத்தில் கதைக்கப்பயில் கட்டணம் மாதாந்தம் 150/- வேண்டாம்.
விக்கினேஸ்வரன் ஆச்சாரி :
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2734)

## ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு



அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே) (சி-2725)

## நாகம்ஸ் சுன்னாகம்



விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த

மதுர

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

தனுஸ், சிந்துலானி கருணாஸ் மற்றும் மணிவண்ணன்



வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

Return to two moon junction (சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 6.00 (பு.நே)

## சிற்றி சினிமா பண்டத்தரிப்பு

இன்று முதல் குதூகல ஆரம்பம்

விஜயகாந், நமீதா, பிரபுதேவா மற்றும் வடிவேல் நடிப்பில்



(ரீல்ஸ்) (சி-3195)

எங்கள் அண்ணா

தினசரி காட்சிகள் : , 3.00, 7.00 (பு.நே)

# நிபந்தனைகள் விதித்தபின்னரே புலிகளுடன் அரசு பேசவேண்டும்!

## எல்லாவல மேதானந்த தேரர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அல்லாமல், அரசாங்கத்தால் புலிகளுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டு, அந்த நிபந்தனைகளுக்கு அமைவாகவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் ஈழ ராஜ்ஜியத்துக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இதன் ஒரு கட்டமாகவே திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றிக் காவலரண்களை அமைத்துள்ளனர். அத்துடன் இராணுவத்தின் உளவுப்பிரிவுத் தலைவர்களைக் கொலை செய்து வருகின்றனர்.

ஆனால், அரச தரப்பினர் கருணா - புலிகள் மோதலை எந்த விதத்திலும் சாதகமான முறையில் பயன்படுத்தவில்லை.

எனவே, நோர்வே, அரசுடனான தொடர்பைக் கைவிட வேண்டும் உட்பட பொதுமக்கள் கையொப்பங்களுடன்கூடிய முக்கிய கோரிக்கைகள் 5 அடங்கிய மனுவொன்றை ஜனாதிபதி சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

பயங்கரவாதிகளின் மடம்போல நோர்வே அரசு மாறியுள்ளது.

இந்த நிலையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்றால், அரசாங்கம் புலிகளுக்கு நிபந்தனைகளை விதிக்கவேண்டும்.

அதிலும் விசேடமாக புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும். கரும்புலிப் படையணியைக் கலைத்துவிடவேண்டும். சிறுவர்களைப் புலிகள் இயக்கத்தில் இணைப்பதை நிறுத்தவேண்டும் போன்ற நிபந்தனைகளை விதிக்கவேண்டும். எந்தவொரு அரசானாலும், புலிகளுக்கு நிபந்தனைகளை விதித்தே பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லவேண்டும்.

இராணுவத்தினரின் மனோநிலை தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டே வருகிறது. வேண்டிய நேரங்களில் போரிடுவதற்குப் படையினர் விசேட பயிற்சிகளைப் பெறவேண்டியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# 97 கடவுச்சீட்டுக்களுடன் ஏஜென்ட் கைதானார்!

(கொழும்பு)

97 கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த ஒருவரைக் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர். கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தன்வசம் 7 கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தார்.

அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேலும் 90 கடவுச்சீட்டுக்களை அவருடைய வீட்டிலிருந்து கைப்பற்றினர்.

இந்தக் கடவுச்சீட்டுக்களை பயனபடுத்தி ஜேர்மனிக்கு செல்வதற்கு தயாரானவர்களுடைய பெயர்களையும் பொலிஸார் இவர் மூலமாகப் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

தனது வாடிக்கையாளர்களிடமிருந்து 10 000 ரூபா வீதம் இவர் பெற்றிருந்தமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (01)

# டீசலின் விலை மேலும் உயருமானால் சேவைகளிலிருந்து விலகுவோம்!

## சிற்றூர்தி சங்கத் தலைவர் எச்சரிக்கை!

டீசலின் விலை மேலும் உயர்த்தப்படுமானால் தாம் பயணிகள் சிற்றூர்திகளை சேவைகளிலிருந்து விலக்கிக் கொள்ளப் போவதாக சிற்றூர்தி சேவைச் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண எச்சரித்துள்ளார்.

ஏற்கனவே, டீசலின் விலை உயர்த்தப்பட்டமையை அடுத்து சிற்றூர்திகளின் கட்டணங்கள் 9 வீதத்தால் அதிகரிக்கப்பட்டன. மீண்டும் டீசலின் விலை உயர்த்தப்பட்டால் போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்படவேண்டும். ஆனால், போக்குவரத்து ஆணைக்குழுவுடன் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தம் காரணமாகத் தமக்குக் கட்டணங்களை அதிகரிக்க முடியாத நிலை ஏற்படும் என்பதை கெமுனு விஜயரட்ண சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, டீசலின் விலையை உயர்த்தும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவேண்டாம் என திறைசேரியின் செயலாளரை அவர் எழுத்துமூலம் கோரவுள்ளார். (01)

## மட்டக்களப்பில் நடைபெற்ற

# சந்திப்பில் தளபதிகள் இல்லை படைத்தரப்பில் அதிருப்தி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இடம்பெற்ற படைத்தரப்பினருடனான சந்திப்பின்போது விடுதலைப்புலிகளின் இராணுவப்பிரிவு தளபதிகள் கலந்துகொள்ளாமை குறித்து இலங்கை இராணுவத்தரப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் விடுதலைப்புலிகளின் இராணுவ பிரிவு தளபதி கேணல் ரமேஸ், புலனாய்வு பிரிவுத் தளபதி ரமணன் ஆகியோர் கலந்துகொள்வது அவசியம் என படைத்தரப்பு வலியுறுத்தியிருந்தது.

எனினும் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவே ஆராயப்பட்டதால், தமது அரசியல் பிரிவு பிரதிநிதிகளே கலந்து கொள்வார்கள் என்று விடுதலைப்புலிகள் முன் கூட்டியே அறிவித்திருந்தனர்.

மாவட்டத்தின் பாதுகாப்புத் தொடர்பாக தாம் விடுதலைப் புலிகளின் இராணுவத் தளபதிகளோடு பேசுவதற்கு விருப்பம் கொண்டிருந்த போதிலும், அவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளாதது தமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக படைத்தரப்பினர் தெரிவித்தனர். (01)

# ஒரு வழிப் போக்குவரத்துப் பாதை; அடுத்த வாரம் பரீட்சார்த்த நடவடிக்கை

(கொழும்பு)

காலி வீதியில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள ஒரு வழிப் போக்குவரத்து நடைமுறை அடுத்த வாரம் பரீட்சித்துப் பார்க்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி பூரண விடுமுறை தினத்திலும், அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இந்த புதிய நடைமுறை பரீட்சித்துப் பார்க்கப்படவுள்ளதுடன், ஊடகங்கள் வாயிலாகவும் ஏனைய வகைகளிலும் பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக நகர போக்குவரத்துப் பிரிவு இயக்குனர் லாபீர் தெரிவித்தார்.

இதன் ஒரு கட்டமாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி தொடர்மாடிப் பகுதியிலிருந்து கொள்ளுப்பிட்டி சந்திவரை கொழும்பு நோக்கிய வாகனங்களுக்கு ஒருவழிப் போக்குவரத்து ஒழுங்கு செய்யப்படும் அதேவேளை, லிபேர்ட்டி சுற்றுவட்டத்தில் ஆரம்பித்து வெள்ளவத்தை சவோய் படமாளிகைவரை கொழும்பிலிருந்து வரும் வாகனங்களுக்குரிய ஒருவழிப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையின்படி 6 பாதை ஒழுங்கைகள் கொண்டதாக, இந்த இரண்டு பிரதான வீதிகளும் மாற்றி அமைக்கப்படும். இடது பக்க ஒழுங்கையூடாக பேரூந்துப் போக்குவரத்தை நடத்த வேண்டும் என பேரூந்து ஓட்டுநர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறையைக் கண்காணிப்பதற்கு 200 போக்குவரத்து பொலிஸார் மேலதிகமாக பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக நகர போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பிரிவு இயக்குனர் அறிவித்துள்ளார். (01)

### புலமைப் பரிசில் முடிவுகள் அடுத்தவாரம்

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை வெளியிடப்படவுள்ளது.

பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜேசிறி இந்தத் தகவலை வெளியிட்டார். சுமார் மூன்று இலட்சம் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியிருந்ததாகத் தெரிவித்த அவர்,

பரீட்சை முடிவுகள் இணையத் தளம் மூலமாகவும் வெளியிடப்படும் எனத் தெரிவித்தார்.

# நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக அரசு நிதியைக் கையாள்கின்றது!

## பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காக ஊழியர் சேமலாபநிதி, ஓய்வூதியநிதி, மற்றும் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் நிதி ஆகியவற்றை, வரவு - செலவுத்திட்டத்திற்குப் புறம்பாக கையாள்வதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

இந்த நிதியைக்கூட சட்ட விரோதமாகக் கையாள்வது மிகவும் பாதகமான விடயமாகும். ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையிலேயே தற்போதைய அரசாங்கம் இயங்கி வருகின்றது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் வரையறைக்குள் அரசு செயற்பட்டிருந்தால் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆனால் வரவு செலவுத் திட்டத்திற்கு வெளியே அரசு செயற்படுகின்றது எனவும் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# பேச்சுக்கள் தாமதமாவதற்கு ஐ.தே.கட்சியே காரணம்!

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை சமாதானப் பேச்சுக்களில் உள்ளடக்கியதாலேயே, சமாதானப் பேச்சுக்களை முன்நகர்த்திச் செல்வதற்குத் தடையாக இருப்பதாக, துறைமுக சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சரான டிலான் பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறான் அமைப்பு ஒழுங்காக இயங்கி இருந்தால், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்ற கருத்துத் தோன்றியிராது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்ற யோசனை கொண்டுவரப்பட்டது சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிக்கொடி இறக்க முயன்ற பொலிஸாரின் முயற்சி தோல்வி

(திருகோணமலை)

திருகோணமலையில் தியாகி தீலிபன் நினைவு உண்ணாவிரத நிகழ்வில் ஏற்றப்பட்ட தமிழீழ தேசியக் கொடியை இறக்குவதற்கு பொலிஸாரால் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதும் அது பலனளிக்கவில்லை.

நேற்று திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் தியாகி திலீபன் நினைவாக உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் இதில் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கையில், பொலிஸார் கொடுத்த தகவல் ஒன்றின் பேரில் அங்கு விரைந்த போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கொடியை இறக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

நிகழ்வு ஆரம்பத்தில் ஏற்றப்பட்ட கொடி எந்தக் காரணம் கொண்டும் நிகழ்வு முடிய முன்பு இறக்கப்படமாட்டாது என ஏற்பாட்டாளர்களினாலும் விடுதலைப் புலிகளினாலும் தெரிவிக்கப்பட்டதையடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அந்த இடத்தை விட்டுத் திரும்பினர்.

## லஞ்சம் பெற்றதற்காக

# சிறைச்சாலை அதிகாரிக்கு எட்டு வருட கடூழியச் சிறை!

(கொழும்பு)

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டிற்கு உள்ளான வெலிக்கடைச் சிறைச்சாலை குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி ஒருவரின் குற்றம் நிரூபிக்கப்பட்டு, எட்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரின் கைது செய்யப்பட்ட ஆறுமுகம் கணபதி ராஜா என்ற தமிழ் இளைஞருக்கு எதிராக வழக்குத் தொடரலாம் அவரை விடுதலை செய்ய 10 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்றதாக நந்தன சேன என்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணை செய்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய, குற்றவாளிக்கு எட்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலர்களுக்குப் பயிற்சி!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை நாடாளுமன்ற விவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரினதும் தனிப்பட்ட அலுவலர்கள் 900 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அரச நிறுவனங்களுக்கு எவ்வாறு உதவுவது, பொது மக்களுடனான உறவுகளை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன், கணினிப் பயிற்சியும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட அலுவலர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி முதற் கட்டமாக வடமேல் மாகாணத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (01)

### மினி உலகக் கிண்ண அரையிறுதியில்

# முதலில் துடுப்பெடுத்தாட எடுத்த முடிவு சரியானதே என்கிறார் இன்ஸமாம்!



மேற்கிந்தியத் தீவுகளுடனான ஐ.சி.சி சம்பியன கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாட மேற்கொண்ட முடிவு சரிதான் என்று இன்ஸமாம் உல்ஹக் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது -

துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பை உணர்ந்து ஆடாததாலேயே அணி தோல்வியுற்றது.

ஒரு கட்டத்தில் ஒரு விக்கெட்டை இழந்து 65 ஓட்டங்களைச் சேர்த்திருந்தோம். அதன் பின்னர் வந்தவர்களே நிலைகுலையும் படியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.


அம்மாதிரியான ஆடுகளத்தில் முதலில் ஆடும் அணி 220 ஓட்டங்களைக் குவித்தாலே வெற்றிபெறலாம் எனக்கருதி முதலில் ஆட முடிவு செய்தேன். அதேசமயம் இரண்டா வதாக ஆடும் அணி அதை எட்டுவது மிகவும் கடினம் என்பதையும் உணர்ந்திருந்தேன்.

ஆனால், தொடக்க வீரர்கள் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தியும், மற்றவர்கள் உறுதுணையளிக்காதது அணிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அதே சமயம் மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள் அற்புதமாக பந்துவீசினர் என்றார் இன்ஸமாம்.

முதலில் துடுப்பெடுத்தாட இன்ஸமாம் மேற்கொண்ட முடிவு உண்மையிலேயே எங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

காரணம் முதலில் ஆடுபவர்கள் ஓட்டங்களைக் குவிக்க முடியாத தன்மை அந்த ஆடுகளத்தில் இருந்தது என, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துணைக் கப்டன் ராம் நரேஷ் சர்வான் தெரிவித்தார்.

# இன்றைய போட்டியில் லாரா விளையாடுவார்




இன்று நடைபெறவுள்ள மினி உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கப்டன் லாரா விளையாடுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுடனான அரையிறுதிப் போட்டியில் அக்தரின் பந்து வீச்சில் லாரா பலத்த காயமடைந்து மைதானத்திலிருந்து வெளியேறினார்.

இந்த நிலையில், லாராவுக்கு ஏற்பட்டுள்ள காயம் பெரிய அளவில் இல்லையென்றும், இங்கிலாந்துக்கு எதிரான இன்றைய இறுதிப் போட்டியில் அவர் நிச்சயமாக ஆடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீரர்களின் மோசமான ஆட்டத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்

## கங்கூலி தெரிவிப்பு



(புதுடெல்கி)

ஐ.சி.சி சம்பியன் கிரிக்கெட் போட்டி இந்தியாவுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. பாகிஸ்தானிடம் தோற்று அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது.

இந்திய அணி லண்டனிலிருந்து கடந்த புதன் அதிகாலை ஏர் இந்தியா விமானத்தில் மும்பை வந்தது.

மும்பை விமான நிலையத்தில் வைத்து கங்கூலி நிருபர்களிடம் கூறியதாவது -

கடந்த சில மாதங்களாக இந்தியாவின் துடுப்பாட்டம் மோசமாக இருக்கிறது. இது கவலையளிப்பதாகும். முன்னணி வீரர்கள் யாருமே சிறப்பாக ஆடவில்லை. ஒவ்வொரு வீரரும் தனது துடுப்பாட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

அணியிலுள்ள வீரர்கள் கடந்த ஆண்டு டெஸ்டில் சிறப்பாக ஆடினார்கள். அவுஸ்ரேலியா, பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான டெஸ்ட தொடரில் வெற்றிபெற்றிருக்கிறோம்.

அவுஸ்ரேலிய தொடரில் வீரர்கள் அனைவரும் சிறப்பாக ஆடுவார்கள். மோசமான ஆட்டத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

அவுஸ்ரேலிய தொடருக்கு முன்பு இந்தியா - இந்தியா 'ஏ' இடையேயான பயிற்சி ஆட்டம் இருப்பது நல்ல முடிவு. இந்தப் பயிற்சி ஆட்டத்தில் வீரர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பாக இருக்கும். யுவராஜ்சிங், ஆகாஷ் சோப்ரா ஆகியோரில் யார் தொடக்க ஆட்டக்காரராக இறக்கப்படுவார் என்பது பயிற்சி ஆட்டத்தில் தெரியவரும்.

ராகுல் ராவிட் ஒருவரே எந்தக் காலகட்டத்திலும் சிறப்பாக விளையாடுகிறார். உதாரணமாக பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தைச் சொல்லலாம். ஒருநாள் போட்டியில் அவர் சிறந்த துடுப்பாட்ட வீரராக இருப்பதால் தொடர்ந்து விக்கெட் கீப்பராக நீடிப்பார்.

இவ்வாறு கங்கூலி கூறினார்.

## ஹர்மிசனின் முடிவுக்கு ஒலங்கா ஆதரவு

(லண்டன்)

சிம்பாப்வே தொடரைப் புறக்கணித்த ஹர்மிசனின் முடிவுக்கு ஒலங்கா ஆதரவு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி வரும் ஒக்ரோபரில் சிம்பாப்வே சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. சிம்பாப்வேயில் நடந்துவரும் அரசியல் பிரச்சினைக்காக இங்கிலாந்து அணியின் முன்னணி பந்துவீச்சாளரான ஹர்மிசன் - இந்தத் தொடரில் பங்கேற்கப்போவதில்லை என சமீபத்தில் அறிவித்துள்ளார்.

இவரின் முடிவை சிம்பாப்வேயின் முன்னாள் வீரரான ஹென்றி ஒலங்கா வரவேற்றுள்ளார்.

இது குறித்து ஒலங்கா கூறுகையில் -

ஹர்மிசனின் முடிவு பாராட்டப்படவேண்டியது. அரசியல் பிரச்சினையால் சிம்பாப்வே ரசிகர்கள் சிறந்த கிரிக்கெட் வீரர்களின் ஆட்டத்தைத் தங்கள் நாட்டில் காண முடியாமல் போகிறது என்று கூறினார்.

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

கோண்டாவில் வடக்கு அம்பிகை முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வுகள் இன்று பி.ப 1 மணிக்கு முன்பள்ளியின் ஆசிரியை திருமதி மு. விமலாம்பிகை தலைமையில் கோண்டாவில் பரஞ்சோதி விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (82)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(நெல்லியடி)

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பி.ப 2.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.தயாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இடைவேளையின்போது சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வும் இடம்பெறும். (12)

# சர்வதேச தடகளப் போட்டியில் அஞ்சு ஜோர்ஜ் தங்கம் வென்றார்



சர்வதேச தடகளப் போட்டியில் இந்தியாவின் அஞ்சு ஜோர்ஜ் தங்கம் வென்றார்.

சர்வதேச தடகளப் போட்டி ஜப்பானிலுள்ள யோகோகோமா நகரில் நடந்து வருகிறது. இந்தப் போட்டிக்கான பெண்கள் நீளம் தாண்டுதலில் இந்தியாவின் அஞ்சு ஜோர்ஜ் தங்கப் பதக்கம் வென்றார்.

சர்வதேச தரவரிசையில் 6 ஆவது இடத்திலிருக்கும் அஞ்சு இந்தப் போட்டியில் 6.61 மீற்றர் தாண்டி முதலிடத்தைப் பெற்றார்.

சமீபத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவரும், தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் தத்யானா லெபடோவா 2 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

இவரும் 6.61 மீற்றர் தாண்டினார். ஆனால் 2 ஆவது வாய்ப்பில் அஞ்சு முன்னணி பெற்றிருந்த காரணத்தால் முதல் இடத்தை லெபடோவா கோட்டை விட்டார். உள்ளூர் வீராங்கனை யுகா சட்டோ 6.44 மீற்றர் தாண்டி வெண்கலம் வென்றார்.

### உலக நீச்சல் போட்டிகளிலும்

# அதிக தங்கப் பதக்கங்களை பிஹெல்ப்ஸ் பெறும் வாய்ப்பு




(நியூயோர்க்)

அமெரிக்காவில் அடுத்தமாதம் 7 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள 7 ஆவது நீச்சல் சம்பியன் போட்டியில் மைக்கல் பிஹெல்ப்ஸ் அதிக தங்கப் பதக்கங்களை பெறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏதென்ஸில் கடந்த மாதம் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 6 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றிய அவர் குறைந்தது அந்த அளவிலான பதக்கங்களையாவது உலக சம்பியன் போட்டியிலும் பெறுவார் என ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

இங்கு நடைபெறும் பல்வேறு போட்டிகளில் 6 பிரிவுகளில் பங்கேற்கவுள்ளார் 19 வயதாகும் பிஹெல்ப்ஸ்.

200 மீற்றர் பிரெஸ்ட் ஸ்ட்ரோக், 200 மீற்றர் பட்டர்பிளை, 100, 200 மற்றும் 400 மீற்றர் தனிநபர் மெட்லே, 200 மீற்றர் தொடர் நீச்சல் ஆகிய பிரிவுகளில் இவர் பங்கேற்கவுள்ளார்.



**பீஜிங்கில் சீன ஓபன் ரெனிஸ் நடைபெற்றுவருகிறது. இதன் 2 ஆவது சுற்றில் அமெரிக்க ஓபன் பட்டம் வென்ற ரஷ்ய வீராங்கனை சுவட்லனா குனஸ்டோவா சீன வீராங்கனை லீனாவை எதிர்கொண்டார். இதில் குனஸ்டோவா 6-3, 6-7, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றார்.**




# இந்தியாவுடன் முதல் டெஸ்ட்; பொண்டிங் விளையாடமாட்டார்



(மெல்போர்ண்)

அவுஸ்ரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் ஐ.சி.சி மினி உலகக்கிண்ணப் போட்டியில் இங்கிலாந்துடன் நடந்த அரையிறுதிப் போட்டியில் கையில் காயமடைந்தார்.

இதனால் இந்தியாவுக்கெதிராக அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கு அடம் கில்கிறிஸ்டே தலைமை தாங்கவுள்ளார். பொன்டிங்கின் இடத்துக்கு சுழற்பந்து வீச்சாளர் பிரட் ஹொக் இணைக்கப்பட்டுள்ளார்.

கையில் காயமடைந்த பொன்டிங்கிற்கு விரைவில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சச்சினின் உடல் தகுதியை கண்காணிக்க இருவர் நியமனம்



(புதுடெல்கி)

டெண்டுல்கரின் உடற்தகுதியைத் தொடர்ந்து கண்காணிக்க லெய்பஸ் மற்றும் ஆனந்த் ஜோஷி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முழங்கை வலி காரணமாக டெண்டுல்கர் அவதிப்பட்டு வருகிறார். இதனால் சமீபத்தில் நடந்த 3 போட்டிகளில் டெண்டுல்கர் கலந்துகொள்ளவில்லை. இந்தியாவில் நடக்கும் அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் இடம்பிடிப்பாரா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

இந்த நிலையில், டெண்டுல்கரின் உடற்தகுதியைத் தொடர்ந்து கண்காணிக்க லெய்பஸ் மற்றும் ஆனந்த் ஜோஷி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் நாயர் தெரிவித்தார். சச்சினின் உடற்தகுதி குறித்து அடுத்தவாரம் முடிவு எடுக்கப்படவுள்ளது.

## பழமொழிகள்

1. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
2. சூடு கண்ட பூனை அடும் பங்கரை நாடாது.
3. ஆனைக்கும் அடி சறுக்கும்.
4. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
5. ஆழம் அறியாமல் காலை விடாதே.
6. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு.
7. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்.
8. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு.
9. காவோலை விழ, குருத்தோலை சிரிக்குது.
10. பட்டகாலே படும். கெட்ட குடியே கெடும்.

ம.மனோர்த்திகா
தரம் – 7
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

## மரமே மரமே பனை மரமே

மரமே மரமே பனை மரமே
பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்வாயாமே
கற்பக தருவா காமதேனுவா
இரண்டு விரலில் ஒன்றைத் தொடாட
விரலில் கிடைத்தது விடையடா.

உந்தன் சின்னப் பருவத்தை
வடலி என்பாரே
வடலியின் ஓலையில் மாதவி அக்கா –
அழகான விசிறி செய்வாரே
எங்கள் பாட்டி உந்தன் குருத்திற்கு
வண்ணச் சாயம் இட்டு
வண்ணப் பெட்டி இழைப்பாரே.

மண்ணின் ஆசையில் ஆயிரம் –
கால்களைப் பரப்பி வாழ்கின்றாய்.
அப்பப்பா! உன்னில் எத்தனை –
பயன்களை நாம் பெறுகின்றோம்
நானும் இறந்ததும் என் உடலை –
மனிதருக்கு பயன்பட அளிப்பேனே.

சிலபேர் வந்தார்கள்
உனக்கு மொட்டையடிக்க
மரமே மரமே பனை மரமே
பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்வாயே.


மா.இராகுலன்

## சித்திரக் கதை

### நட்பின் சிறப்பு

எவ்வளவுதான் பொன்னும், பொருளும் கிடைத்தாலும், அதனைப் பங்கிட்டுக்கொடுக்கும் தன்மை நண்பருக்கு மட்டும் தான் உண்டு. அது தான் நட்பின் சிறப்பு

பகுதி IV




எவ்வளவுதான் பொன்னும், பொருளும் கிடைத்தாலும் – அதைப் பங்கிட்டுக் கொடுக்கும் மனம் நட்புக்கு மட்டும் தான் உண்டு.


(முற்றும்)

கதை ஓவியம் | ந.யருண்

## பூனை

பூனைகள் – வீட்டு விலங்குகளாகவும், காட்டு விலங்குகளாகவும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருபவை, இவை வேட்டையாட உதவும் விலங்குகளாகவும் கருதப்பட்டு வந்துள்ளன.

பூனைகள் – மாமிசம் உண்பவை. இவை அந்தாட்டிகா, அவுஸ்ரேலியாவைத் தவிர உலகெங்கும் பரவலாக உள்ளன. சிங்கம், புலி போன்ற பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த பெரிய விலங்குகளைத் தவிர, வளர்ப்புப் பிராணிகளான வீட்டுப் பூனைகளில் சுமார் பன்னிரண்டு வகை உள்ளன.



பூனைக்கு கேட்கும் திறனும், ஒலியை பகுத்தறியும் திறனும் அதிகம். இதனால், மனிதர்களால் கேட்க முடியாத நுண்ணிய சத்தங்களைக்கூட பூனைகளால் கேட்க முடியும். அத்துடன், பூனைக்கு பார்வைத்திறனும் மிக அதிகம். முழுமையான இருட்டில் மட்டும் இவற்றால் பார்க்கமுடியாது. சிறிய வெளிச்சம் போதும் பூனைகளால் பார்த்து உணர்ந்து கொள்ளமுடியும்.

பூனைக்கு மிக முக்கியமானது அவற்றின் மீசை முடி. அவற்றுக்கு உணர்திறன் அதிகம். முடியில் மிக நுண்ணிய பொருள் பட்டால்கூட அதற்குத் தெரிந்துவிடும். இருட்டில் வழி கண்டுபிடிக்கவும் பூனைக்கு அதன் மீசை முடி உதவுகிறது. பூனைகளுக்கு கூட்டமாக வாழ்வது பிடிக்காது. இவை எல்லை அமைத்து வாழ்பவை.

இவற்றின் உணவு – சிறிய பறவைகள், எலிகள், மீன்கள், நத்தைகள், பால் மற்றும் மனிதர்களால் தரப்படும் எந்த உணவும். பூனைகளால் இனிப்புச் சுவையை உணர முடியாது. அழகு, கம்பீரம், நளினம் போன்றவற்றின் சின்னமாகக் கருதப்படும் பூனைகள் – ஓவியர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் முக்கியமான கருவாக இருக்கின்றன.

இங்கே மடிக்கவும்



# சிறுவர் அரங்கம்

### சிந்தனைக்கு!

என்ன சொல்லப்படுகிறது என்பதைவிட, எந்த நோக்கத்தோடு சொல்லப்படுகிறது என்பதை அறிவதே அறிவு.

## புதிய காக்கைகளும் பழைய நரிகளும்

(சென்றவாரத் தொடர்ச்சி...) – அறிவுமதி

காக்கா கீழே விழுந்த குச்சிகளை எல்லாம் ஓர் இடத்தில் கொண்டு வந்து சேர்த்தது. கீழே கிடந்த சின்னச் சின்னக் கொடிகளை எடுத்து குச்சிகளை ஐந்தாறு கட்டுகளாகக் கட்டியது.

ஒவ்வொரு கட்டாகக் கொண்டுபோய் பாட்டியின் பக்கத்தில் வைத்தது. பாட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை.

'என்ன காக்கா! எதற்கு இதெல்லாம்?' என்று கேட்டாள் பாட்டி.



'பாட்டி! பாட்டி! என் குழந்தைகள் இரண்டு பேரும் மிகவும் பசியோட கூட்டில் துடித்துக்கொண்டு இருக்குதுகள். எங்கெங்கோ தேடியும் இது வரை எதுவும் கிடைக்கல. உங்ககிட்ட சும்மா கேட்கவும் மனசு இல்ல. அதனால தான் பாட்டி இப்படி' என்று அம்மா காக்கா கூறவும், பாட்டி மகிழ்ந்து போனாள்.

'ஏமாத்திப் பிழைக்கக்கூடாது. உழைச்சு தான் சாப்பிடோனும் என்ட உன்ரை மனசு எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு. இந்தா காக்கா! இந்த ரெண்டு வடையை எடுத்துக்கொண்டு போ. ஒரு வடையை நீ சாப்பிடு, ஒரு வடையை உன்னோட குழந்தைகளுக்கு எடுத்துக் கொண்டு போ' என்று சொல்லி – இரண்டு வடையை எடுத்துக்கொடுத்தாள். சிரமப்பட்டு இரண்டு வடைகளையும் அலகுகளால் கௌவிக்கொண்டு, பறந்து போய் ஒரு மரக்கிளையில் அமர்ந்தது. பறப்பதற்கே சக்தியற்ற நிலையில் இருந்த அம்மா காக்கை – ஒரு வடையைக் காலில் வைத்துக் கொண்டது. ஒரு வடையைப் பசியாறத் தின்றது.



காலில் வைத்திருந்த வடையை வாயில் கௌவிக் கொண்டு பறக்கத் தொடங்குவதற்குச் சிறகுகளை உதறியது. அந்த நேரம் பார்த்து ஒரு நரி அங்குவந்தது. வாயில் வடை வைத்திருக்கும் காக்கையைப் பார்த்தது. அந்த வடையை எப்படியாவது ஏமாற்றிப் பிடுங்கிக்கொள்ள வேண்டும் என்று அந்த நரி வாலை ஆட்டியபடி சிந்தித்தது.

அடுத்த விநாடியில் அம்மா காக்கையைப் பார்த்து, காக்கா! காக்கா! நீ எவ்வளவு அழகா இருக்கிறாய். பாக்கிறதுக்கு இவ்வளவு அழகாக இருக்கிறியே. நீ பாட்டுப் பாடினா இன்னும் எவ்வளவு அழகாக இருக்கும்! எங்கே, ஒரே ஒரு பாட்டுப் பாடேன் கேட்கலாம்' என்று நரி கேட்டது.

பாராட்டு வார்த்தைகளில் மயங்கிப்போன அம்மா காக்கா – அவசரப்பட்டு அலகுகளைத் திறந்தது. வடை கீழே விழுந்து விட்டது. விழுந்த வடையை நரி உடனே கௌவிக்கொண்டது.

ஏமாந்து போய்விட்டோம் என்பதை உணர்ந்து கொண்ட காக்கை – நரியிடம் கெஞ்சியது. 'நரி அண்ணே! கொஞ்சநேரத்துக்கு முன் வந்திருந்தால்கூட நான் சாப்பிட்ட வடையை உனக்குக் கொடுத்திருப்பேன். என்ரை குழந்தைகளுக்குக் எடுத்துப்போக வச்சிருந்த வடையை இப்படி ஏமாத்திப் பிடுங்கிக்கிட்டாயே. நான் உழைச்ச சம்பாதிச்ச வடையை இப்படி ஏமாத்திப் பிடுங்கிப்போட்டியே நான் உழைச்சு சம்பாதிச்ச வடையை தயவு செய்து திருப்பிக் கொடுத்து விடு'.

அம்மா காக்கை –எவ்வளவு கெஞ்சிக் கேட்டதையும் பொருட்படுத்தாமல், வடையை எடுத்துக் கொண்டு நரி ஓடத் தொடங்கியது.

காக்கை உடனே 'கா கா' என்று சத்தம் போட்டுக் கத்தியது. சிறிது நேரத்தில் அந்தப் பக்கத்தில் இருந்த எல்லா காக்கைகளும் ஓடி வந்துவிட்டன. 'என்ன நடந்தது?' என்று காக்கைகள் கேட்டன. நரி தன்னை ஏமாற்றியது பற்றி அம்மா காக்கை கூறியது.

அந்த நரி எந்தப் பக்கம் ஓடியது?' என்று காக்கைகளின் தலைவி கேட்கவும் – 'இப்படிக் கிழக்குப் பக்கம்தான்' என்று அம்மா காக்கை கூறியது. உடனே அனைத்துக் காக்கைகளும் கிழக்கு நோக்கிப் பறக்க ஆரம்பித்தன.



நரி ஓடு வது தெரிந்ததும் இன்னும் வேகமாகப் பறந்து போய் அதனைச் சுற்றி வளைத்து முற்றுகையிட்டுக் கொண்டன.

இனி தப்பிக்கமுடியாது என்று தெரிந்து கொண்டதும், வடையைக் காலில் போட்டு மிதித்துக்கொண்டு, சத்தம் போட்டு ஊளையிட்டது. ஊளைச்சத்தம் கேட்டு, காட்டிலுள்ள நரிகள் எல்லாம் ஓடி வந்தன.

தங்கள் நரியை முற்றுகையிட்டிருக்கும் காக்கைகளைப் பார்த்ததும் – நரித்தலைவனுக்குக் கோபம் வந்து விட்டது. 'போடிப் பசங்களா, எதுக்கடா எங்க நரியைச் சுத்தி வளைச்சிருக்கிறீங்க? இப்ப விடப் போறீங்களா? இல்லையா?' என்று மிரட்டலாகக் கேட்டது.

'எங்கட காக்கை தன்னோட குழந்தைகளுக்காகச் சிரமப்பட்டு உழைச்சு சம்பாதிச்ச வடையை, உங்க நரி கேவலமான முறையில் இப்படி ஏமாற்றிப் பிடுங்கியிருக்கு. இதைத் திருப்பிக் கொடுக்க வேணும். இந்தக் கேவலமான செயலுக்கு மன்னிப்புக் கேக்க வேணும். அப்பதச் செய்தா உங்க நரியை விட்டு விடுகிறோம்' என்று காக்கைகளின் தலைவி பொறுமையாகக் கூறியது.



'கொடுக்காவிட்டா என்ன செய்வீங்களாம்' நரித்தலைவன் ஏளனமாகக் கேட்டது. 'உங்க நரியை விடமாட்டோம்' காக்கைகளின் தலைவி உறுதியாகக் கூறியது. அதைக் கேட்டதும் நரித் தலைவனுக்குக் கோபம் தாங்கமுடியவில்லை. 'நரிகளே! இந்தக் காக்கைகளை எல்லாம் சும்மா விடாதீர்கள். கடித்துக் குதறுங்கள்' என்று கட்டளை இட்டது.

'காக்கைகளே! இனியும் இந்த வஞ்சக நரிகளிடம் நாம் ஏமாந்து கொண்டிருக்க முடியாது. ஏமாறவும் கூடாது. எதிர்த்துப் போராடுங்கள்' என்று காக்கைகளின் தலைவியும் கட்டளை இட்டது.

காக்கைகள் பறந்து பறந்து நரிகளைக் கொத்திக் காயப்படுத்தின. சில நரிகள் செத்துப்போயின. பல நரிகள் காயங்களின் வலி பொறுக்க முடியாமல் துடித்தன. ஏமாற்றிய நரியிடமிருந்து வடையைப் பிடுங்கி அம்மா காக்கையிடம் கொடுத்து விட்டு, 'நரிப் பசங்களா! உங்களோட வஞ்சகப் புத்தி இனியும் செல்லாது. எங்களை ஏமாத்திப் பிழைக்க நினைச்சா இனி உங்களுக்கெல்லாம் இது தான் கதி. என்று தலைவி கூறியது. அனைத்துக் காக்கைகளும் வெற்றிக் களிப்போடு ஒற்றுமையாகப் பறந்துபோயின. (முற்றும்)

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்



பெயர் :- ர.புஸ்கரணி
பாடசாலை:- சத்தியசாயி வித்தியாலயம்
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள்:- கதைப்புத்தகம் வாசித்தல்.



பெயர் :- அ.ஆன்சுயுமியா
பாடசாலை :- இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலயம்.
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள்:- வாசித்தல், படித்தல்.



பெயர் :- மு.சுரேஸ்
பாடசாலை:- தேவரையாளி இந்துக் கல்லூரி.
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள்:- பத்திரிகை வாசித்தல், ஓவியம் வரைதல்.

பெயர் :- வை.அகல்யா
பாடசாலை :- கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை
தரம் :-4
ஆர்வமுள்ள துறைகள்:- பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.


பெயர் :- த.கஜந்தன்
பாடசாலை :- கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி
தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள்:- கதைப்புத்தகம் வாசித்தல், விளையாட்டு, தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர் :- ப.ரோணிதா
பாடசாலை :- பளை மத்திய கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள்:- விளையாட்டு, தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர் :- ம.ரொசாந்தி
பாடசாலை :- நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள்:- தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல்.

## சோடி சேருங்கள்

சிலந்தி
தையற்சிட்டு
குளவி
பெருச்சாளி



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தை பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :.................................
கற்கும் பாடசாலை :.................................
கற்கும் தரம் :.................................
வீட்டு முகவரி :.................................
பிறந்த திகதி :.................................
ஆர்வமுள்ள துறைகள் :.................................

................ ................
திகதி ஒப்பம்

................ ................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்

## அன்புள்ள சிறுவர்களே!

ஒரு வருடத்தில் 365 நாட்கள் இருக்கின்றன. ஆனால், 4 வருடங்களுக்கு ஒரு முறை வரும் லீப் வருடத்தில் 366 நாட்கள் இருக்கும்.

ஒரு வருடத்தை 12 மாதங்களாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த 12 மாதங்களில் - 4 மாதங்கள், 30 நாட்களைக் கொண்டுள்ளன. அவையாவன - சித்திரை, ஆனி, புரட்டாதி, கார்த்திகை ஆகிய மாதங்களாகும். மாசி மாதம் 28 நாட்களைக் கொண்டது.

மேற்கூறப்பட்ட 5 மாதங்களைத் தவிர, ஏனைய 7 மாதங்களான - தை, பங்குனி, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, மார்கழி அகிய மாதங்கள் 31 நாட்களைக் கொண்டுள்ளன.

லீப் வருடத்தில் வரும் மாசி மாதத்தில் மட்டும் 29 நாட்கள் உள்ளன. அதனால்தான் லீப் வருடம் 366 நாட்களைக் கொண்டிருக்கிறது.

சிறுவர்களே இதேநேரம் ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்... உங்களுக்கே உரிய தினங்களான- ஒக்ரோபர் 1 உலக சிறுவர் தினம் என்பதையும், ஒக்ரோபர் 5 உலக சிறுமியர் தினம் என்பதையும் நினைவு கூர மறந்து விடாதீர்கள்.

- பாசமுடன் - சாரு அக்கா

## மூளைக்கு வேலை

1. ஒரு யானைப் பொம்மையின் விலை ரூ. 50. இது ஒரு குதிரைப் பொம்மையின் விலையை விட ரூ. 20 கூட. குதிரைப் பொம்மையின் விலை என்ன?

2. ஒரு தட்டில் ஐந்து பொம்மைகள் உள்ளன. ஐந்து குழந்தைகளுக்கு ஆளுக்கு ஒரு பொம்மை கொடுக்க வேண்டும். கொடுத்த தட்டில் ஒரு பொம்மை இருக்க வேண்டும். அது எப்படி?

3. ராணி ஒரு கனவு கண்டாள். அதில் அவளது வகுப்பு மாணவர்கள் அனைவரும் சந்திரனுக்குச் சென்றனர். அங்கு வந்த அவர்களுடைய வகுப்பாசிரியர் (சந்திரன் பற்றிய பாடம் நடத்தினார். அவர்களுக்கு பாடம் மிகவும் எளிதாகப் புரிந்தது. இந்தக் கனவிலுள்ள நடைமுறைத் தவறு என்ன?

### மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1. ஒன்று கூட இருக்காது. துப்பாக்கி சுடும் சத்தத்தில் மற்றைய பறவைகள் பறந்தோடிவிடும்.
2. வயலைப் பத்து என்றும் சொல்வார்கள். எனவே வயலுக்குள் ஆறு புகுந்தால் பயிர்கள் நாசமாகும்.
3. 12 முக்கோணங்கள்.


## தெரிந்துகொள்ளுங்கள்

ஆழ்கடல் பகுதியில் அலைகள் இருப்பதில்லை. காரணம்- இங்கு ஒளி உட்புகுவதில்லை. நீர் சலனமற்று இருக்கும். ஆனால் - எரிமலையின் சீற்றத்தாலும், பூகம்பத்தாலும் ஆழ்கடலில் அலைகள் உண்டாகலாம். இந்த அலைகள்- கடலின் மேற்பரப்பில் பெரும் அலைகளாக வெளிப்படும், இது சாதாரண அலைகளிலிருந்து வேறுபட்டு இருக்கும். மற்றும்படி ஆழ் கடல் சலனமற்றது தான். கடல்வாழ் உயிரினங்கள் இடம் பெயர்வதால், ஆழ்கடல் பகுதியில் கடலலை தோன்ற வாய்ப்பில்லை.

## உங்கள் கைவண்ணம்




ம.சிவகௌரி
தரம் - 6
பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி



ம.பார்த்தீபன்
தரம் - 9
யாழ். மத்திய கல்லூரி

## கழுகும் கண்ணனும்




தன் ல் 11 களை இட்டது. இரை தேடி விட்டு யில் க்குத் திரும்பும். ன் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒரு சிறிய கூட இதன் களில் இருந்து தப்ப முடியாது. சிறிய பிராணிகளின் எதிரி. ஒருநாள் இரை தேடி காலியான வெளிக்குச் சென்றது. அங்கு கிடந்த யை அது கவனிக்கவில்லை.

என்ற சிறுவன் வெளிக்குள் நுழைந்தான். தன் காது மூலம் ன் சத்தத்தைக் கேட்டான். உடனே இருக்கும் இடம் நோக்கிச் சென்றான் யை எடுத்து விட்டான். நிம்மதியடைந்தது. ன் உதவியால் மகிழ்ச்சியுடன் தன் க்குத் திரும்பியது. களிலிருந்து 8 குஞ்சுகள் வெளிவந்தன. க்கும் க்கும் இது சிறந்த அனுபவமாக அமைந்தது.

# முகமாலை சோதனைச் சாவடியை 24 மணிநேரமும் திறக்க முடியும்!

### மின்சாரசபை அதிகாரி - ஐ.சி.ஆர்.சியிடம் தெரிவிப்பு

முகமாலையிலுள்ள சோதனைச் சாவடியை 24 மணித்தியாலமும் மக்கள் போக்குவரத்துக்காகத் திறப்பதற்கு தேவையான மின்சார வசதிகள் யாவும் செய்துகொடுக்கப்பட்டிருப்பதாக, இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

முகமாலையிலுள்ள புலிகளினதும், இராணுவத்தினரதும் சோதனைச் சாவடிகளுக்கு ஏற்கனவே 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. முதலில் பாதையைத் திறப்பதற்கு இரு தரப்பினரும் மின்சாரமின்மையைக் காரணங்காட்டி வந்தனர்.

தற்போது மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் ஆரம்ப நடவடிக்கையாக இந்தச் சோதனைச் சாவடிகளை 24 மணிநேரமும் திறக்கலாம்.

இதைச் செயற்படுத்துவதன் மூலம், அடுத்த கட்டமாகத் தற்போது மின்னிணைப்பு வேலைகள் நடைபெற்றுவரும் ஓமந்தைச் சோதனைச் சாவடியை 24 மணிநேரமும் திறக்க முடியும்.

முழு நேரமும் பாதை திறக்கப்பட்டால் போக்குவரத்துக்களில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் விபத்துச் சம்பவங்களும் வெகுவாகக் குறையும். எனவே, விரைவாகச் செயற்பட்டு, நடவடிக்கை எடுக்குமாறு மின்சாரசபை பதில் பொது முகாமையாளர் எஸ்.கமலநாதன் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

### தென்மராட்சி பிரதேச செயலகத்தின்

## கொழகாமம் உப அலுவலகம் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில்!

தென்மராட்சிப் பிரேதேச செயலகத்தின், கொடிகாமம் உப அலுவலகம் எதிர்வரும் முதலாம்திகதி முதல் கொடிகாமம் நகரத்திலுள்ள கொடிகாமம் ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இயங்கவுள்ளதாக, பிரதேச செயலக நிர்வாக அலுவலர் எஸ்.வீரசிங்கம் தெரிவித்தார்.

60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டு இலங்கையிலேயே மிகப்பெரிய பிரதேச செயலகமாக இயங்கிவந்த தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை, இரண்டாகப் பிரித்து 28 கிராம அலுவலர் பிரிவுகளுடன் கொடிகாமம் உதவி அரச அதிபர் பிரிவை உருவாக்குவதற்கான முன்னோடி நடவடிக்கையே இது என அவர் மேலும் தெரிவித்தார்.

பெரும்பாலும் 2005 ஆம் ஆண்டு ஜனவரி முதல் கொடிகாமம தனியான பிரதேச செயலகப் பிரிவாகப் பிரகடனப்படுத்தப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதுபற்றி 'நமது ஈழநாடு' கடந்த 22 ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருட்டுக் குற்றவாளிக்கு 3 வருட கடூழியச் சிறை

யாழ். குருநகர் பிரதான வீதிப்பகுதியில் பட்டப்பகலில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு, யாழ் நீதிமன்றில் மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

யாழ். குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த நபருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த பங்குனி மாதம் 5 ஆம் திகதியன்று பிரதான வீதியிலுள்ள ஒருவரின் வீட்டில், பட்டப்பகலில் ரூபா 50 000 ஆயிரம் பெறுமதியான பொருட்களைத் திருடிக் கொண்டு வீதி வழியாகப் புறப்பட்ட சமயம், பக்கத்து வீட்டுக்காரரும் அயலில் உள்ளவர்களும் அவரை மடக்கிப் பிடித்தனர்.

குற்றவாளி இரண்டு சாட்சிகளினால் அடையாளம் காட்டப்பட்டதையடுத்தே, இந்த நபருக்கு 3 வருட கடூழியச் சிறைத்தண்டனையும், ரூபா 10 000 தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. இதேவேளை திருடப்பட்ட பொருட்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

### ஆலோசனைக் கூட்டம்

சாவகச்சேரி நகர சபையில் ஆலோசனை அபிவிருத்திக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக் கிழமை பி.ப 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில், நகர சபை செயலாளர் கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் என்பனவும் கலந்துகொள்ளவுள்ளன.(29)



நல்லூர் இரதோற்சவ தினத்தன்று நல்லை ஆதீனத்துக்கென E.S.P. நிறுவனத்தின் உரிமையாளர் E.S.P. நாகரத்தினத்தால் ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு, சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அருகில் எஸ்.ரீ.ராஜா மற்றும் ஆதீனசுவாமிகளையும் காணலாம்.

### மோட்டார் சைக்கிள் மோதி

## மூதாட்டி உயிரிழந்த சம்பவம்; சந்தேக நபர்கள் கைதாகினர்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேர்த்திருவிழாவுக்குச் சென்று திரும்பியபோது, விபத்துக்குள்ளாகி இறந்த வயோதிபப் பெண்ணின் மரணத்துக்குக் காரணமானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவதினம், கோவிந்தசாமி செல்லம்மா (வயது 70) எனும் வயோதிபப் பெண்ணை, மோட்டார் சைக்கிளால் மோதிக் காயப்படுத்தியவர்கள், குறித்த மூதாட்டியை மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதித்துவிட்டுத் தலைமறைவாகியிருந்தனர்.

இந்த நிலையில் காயமடைந்தவர் கடந்த 19 ஆம் திகதி மரணமடைந்தார்.

இதனையடுத்து, யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்கினராஜா இந்த மரணத்துக்குக் காரணமானவர்களைக் கைது செய்யுமாறு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நேற்று யாழ்.மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்தபோது சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி ஆர்.ரி.விக்கினராஜா உத்தரவிட்டார்.

(ப)

## இரசாயன கூட்டுத்தாபனத்தின் கிளை சுன்னாகத்தில் திறப்பு!

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள விவசாய இரசாயனங்கள் கூட்டுத்தாபனம் தனது கிளை நிறுவனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளது.

பஸ் நிலையப் பகுதியில் விவசாய இரசாயனங்கள் கூட்டுத்தபனத்தின் பணிப்பாளர் ருக்மல் டயஸ் இந்தக் கிளையை திறந்து வைத்தார்.

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்த நிறுவனம் விவசாய இரசாயனங்களை இறக்குமதி செய்வதில் முன்னணி வகிக்கும் நிறுவனமாகும். இது யாழ்ப்பாணத்தில் தனது முதலாவது கிளை நிறுவனத்தைத் திறந்து வைத்துள்ளது.

இந்த நிறுவனத்தில் விவசாயிகள் விவசாய இரசாயனப் பொருட்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என இதன் பணிப்பாளர் தெரிவித்தார்.

## திலீபன் நினைவுதினம் நெடுந்தீவில் அனுஷ்டிப்பு

(நெடுந்தீவு)

தியாக தீபம் திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த 15 ஆம் திகதி முதல் நெடுந்தீவில் பெரும் எழுச்சியுடன் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

பிரதான வீதிகள் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் எங்கும் எழுச்சிக்கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன், அலுவலகங்கள் கூட்டுறவு ஸ்தாபனங்கள், வர்த்தகநிலையங்கள் எங்கும் திருவுருவப் படம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு, தனியார் வர்த்தக நிலையங்கள், கூட்டுறவுக்கடைகள் என்பவற்றின் பெயர்ப்பலகைகள் தூயதமிழில் எழுதப்படுவதற்குமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (113)

## படையினர் - புலிகள் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்குமிடையிலான சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் அனிகா தலைமையில் நடைபெற்ற இந்தச்சந்திப்பில் , போர்நிறுத்தக் கடல் கண்காணிப்பாளரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோர் கலந்து கொண்டார்.

படைத்தரப்பின் சார்பில் யாழ். மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், யாழ். மாவட்ட பிரதிக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரணவீர, பொலிஸ் அதிகாரி தயா செனவிரத்ன, வட பிராந்தியக் கடற்படை கட்டளைத் தளபதி றியர் அட்மிரல் ரணதுங்க, காரைநகர் கடற்படைத் தளக் கட்டளை அதிகாரி பிரேமரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்றைய சந்திப்பு சுமுகமான முறையில் இடம்பெற்றதாகவும், இது ஒரு மாதாந்தச் சந்திப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
பத்தாவது அகவையில்



பெயர் :அ.அனந்தா
விலாசம் : செம்பியன்பற்று

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

## சின்னஞ்சிறு செய்திகள்

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் குறித்து இதில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு - கிழக்கைச் சேர்ந்த உள்ளூராட்சிச் செயலாளர்களுக்கே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலை உள்ளூர் ஆளுகை நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### போயா தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் போயாதின ஆன்மீக நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5 மணி முதல் இடம்பெறவுள்ளன.

நகர சங்கீர்த்தனம், கொடியேற்றம், பஜனை என்பன இடம்பெற்று பேராசிரியர் கா.சண்முகநாதனின் விசேட உரை இடம்பெறும். நண்பகல் நாராயண சேவையுடன் நிகழ்வுகள் நிறைவுபெறும்

### நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி அதிகார சபையினால் 2004 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் - கெருடாவில் வீதி திருத்தத்துக்கு ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சந்தைப்படுத்தும் நிலையத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் மற்றும் வாராந்த சந்தைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (12)

### குடவத்தை பாலம் திருத்தப்படவில்லை

(கொடிகாமம்)

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் குடவத்தையிலுள்ள பாலம் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

கடந்த 10 மாதங்களுக்கு மேலாகப் பழுதடைந்த நிலையில் காணப்படும் இந்தப் பாலத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பருத்தித்துறையிலிருந்து ஏ-9 வீதியை இணைக்கும் முக்கிய வீதியாகவும், வாகனங்கள் செல்லும் வீதியாகவும் இது உள்ளது.

இதனால் இந்த வீதியால் செல்லும் வாகனங்கள் பலத்த சிரமங்கள் மத்தியில் பயணிக்க வேண்டியதாவுள்ளது. (14)

### பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விண்ணப்பம் கோரல்!

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கில மொழியில் உயர் சித்தியுடன் கூடிய க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியும், உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தியும் உடையவர்கள் விண்ணப்பங்களை 10.10.2004 இற்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட மந்திகை கண்ணகை அம்மன்கோயில் வீதி, திக்கம் மணல் ஒழுங்கை வீதி, ஆனை விழுந்தான் - கற்கோவளம் புனித நகர் வீதி ஆகிய வீதிகள் பருத்தித்துறை பிரதேச சபையால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இந்த வீதிகளைப் புனரமைப்பதற்காக, பருத்தித்துறை பிரதேச சபையால் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (14)

### யோகாசன பயிற்சி வகுப்பு!

இந்துசமய கலாசாலை அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில், யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் புதிய பிரிவு எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது எனவும், பயிற்சி முடிவில் திறமைசாலிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சுய தொழிலுக்கான உதவி!

இந்த மாதம்வரை "விசேட தேவைக்குரியவர்கள் 29 பேருக்கு நல்லூர் பிரதேச செயலகத்தினரால் சுயதொழில் முயற்சிக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தையல் இயந்திரங்களை மூவரும், கோழி வளர்ப்புக்கான நிதியுதவியை ஐந்து பேரும், மாடுவளர்ப்புக்கான நிதியுதவியை நால்வரும், வீடுதிருத்துதலுக்குகான உதவியை மூவரும் பெற்றுள்ளனர்.

ஏனையோர் சிறு வியாபாரம் மற்றும் சுய தேவைகள் போன்றவற்றுக்கான உதவிகளைப் பெற்றுள்ளதாக நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

# காலபோக நெற்செய்கை ஆரம்பித்துள்ளதால் கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையை கருத்திற்கொண்டு - கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு, முள்ளியவளைப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் இ.றொபேர்ட், முள்ளியவளை கமநல அபிவிருத்தித் திணைக்கள பெரும்போக உத்தியோகத்தர் சு.இராசலட்சுமி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது -

கால்நடைகளை வளர்க்கும் மக்கள் - கால்நடைகளைப் பகல் வேளைகளில் மேய்த்து விட்டு, மாலை 6 மணிக்கு கட்டியோ அல்லது பட்டிகளில் அடைத்தோ வைத்திருந்து, மீண்டும் மறுநாள் காலை 6.30 மணிக்கு மேய்ப்போர் மூலம் மேய்ச்சலில் ஈடுபடுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன -

இந்த கால்நடைகள் மூலம் மக்கள், விவசாயிகளுககு அசௌகரியங்களைக் கொடுக்காதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

அத்துடன் பராமரிப்பற்று, கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்படும்.

இவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகள் குறித்த விபரங்கள் அறிவிககப்பட்டு, இரு நாட்களுக்குள் தண்டப் பணத்தை செலுத்தி உரியவர்கள் பெற்றுக் கொள்ளமுடியும். இரு நாட்களுக்குள் உரிமைகோராத கால்நடைகள்- மூன்றாம் நாள் பொதுச் சேவைக்காக ஏலத்தில் விடப்படும்.

இந்த நடைமுறைகளை மீறி நடப்போர் - சட்டநடவடிக் கைக்கு உட்படுத்தப்படுவர் எனவும தெரிவித்துள்ளனர்.

## போஷாக்கு தொடர்பான மதிப்பீடு

உலக தரிசன நிறுவனம் -சிறுவர்களின் போஷாக்குத் தொடர்பான மதிப்பீட்டைக் கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் மேற்கொண்டது.

கடந்த திங்கட்கிழமை பூநகரியின் பள்ளிக்குடா பகுதியில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மருந்துப் பொருட்கள் கொள்வனவு

பளை - பச்சிலைப்பள்ளி பிரதேச ஆயுர்வேத மருத்துவமனைக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகப் பளை - பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் - நடமாடும் வைத்தியசேவை ஆயுர்வேத மருத்துவர்கள் தலைமையில் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை அகதிகள் மேலும் 5 பேர் தலைமன்னார் வந்தடைந்தனர்

இந்திய அகதிமுகாம்களில் தங்கியுள்ள ஈழத்தமிழ் அகதிகளில் மேலும ஐவர் கடந்த செவ்வாய்க்கிழமை தலைமன்னாரை வந்தடைந்தனர்.

3 பெண்களும், 2 ஆண்களுமாக ஐந்துபேர் சிறிய படகொன்றின் மூலம் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

இவ்வாறு வந்த இவர்களைக் கடந்த புதன்கிழமை தலைமன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். இவர்களை அவர்களது சொந்த இடமான மானிப்பாய்க்கு அனுப்பிவைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

இதன்படி கடந்த புதன்கிழமை இந்த ஐவரும் அவர்களது சொந்த இடமான மானிப்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (201)

# வீட்டு மின் இணைப்பு கற்கைநெறி விண்ணப்பத்தின் இறுதிநாள் இன்று

(கிளிநொச்சி)

தேசிய கைத்தொழில் அதிகார சபையால் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக்கல்வி நிறுவன பளைப் பிராந்திய நிலையத்தில் வீட்டு மின் இணைப்பு கற்கைநெறி ஆரம்பிக்கப் படவுள்ளது.

இந்தக் கற்கைநெறி - எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் 18 - 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பதிவாளர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை. என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக கொள்ளப்படுகின்றது. விண்ணப்ப முடிவுத் திகதி இன்றாகும்.

இந்தக் கற்கைநெறியின்போது மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (கௌ)

# பாம்புக்கடிக்கு இலக்கானார்

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவத்தில் சின்னையா கண்ணன் (வயது 26) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்டத்தில் உள்ள வயலில் நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச சம்பவம் இடம்பெற்றது.

இவர் கிளிநொச்சி மாவட்ட வைததியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (9)






லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தால் வட்டக்கச்சி மகா வித்தியாலய மாணவிகளுக்கும், குருகுல மாணவிகளுக்குமிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி வட்டக்கச்சி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட மாணவிகளையும், பிரதம விருந்தினர்களையும் படத்தில் காணலாம். (படம்: வே.சீலன்)

# வவுனியா வைத்தியசாலையில் நீர்த் தட்டுப்பாட்டால் சிரமம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நீர்த் தட்டுப்பாடு நிலவுவதால், சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதில் பல அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

வவுனியா வைத்தியசாலையிலுள்ள அனைத்துக் கிணறுகளும் நீர் வற்றியுள்ள நிலையில் - பொது நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் சேவை அடிப்படையில் குடிநீரினை வழங்கி வருகின்றன.

எனினும், வழங்கப்பட்டுவரும் நீர் வைத்தியசாலைத் தேவைகளுக்குப் பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவித்த வவுனியா வைததிய சாலை அத்தியட்சகர் - நீர்ப்பற்றாக் குறையால் சத்திரசிகிச்சைகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# திலீபனின் நினைவுநாளையொட்டி திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பவனி

தியாகி திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு - செம்மலை மகா வித்தியாலய அதிபர் செ.பரமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில முதன்மைச் சுடரை ஆசிரியை சந்திரகலா ஏற்றி வைத்தார். தொடர்ந்து தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளுக்கும் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்தி . மக்கள் அஞ்சலிக்காக கொண்டு செல்லப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி முதல் இந்த ஊர்தி - முல்லைத்தீவு மாவட்டத்தின் அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் புதுக்குடியிருப்பு, முலலைத்தீவு நகர மத்தி, சிலாவத்தை, செம்மலை, அளம்பில், நாயாறு, குமுழமுனை, முள்ளியவளை, ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளுக்கு மக்கள் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

மேலும் கடந்த செவ்வாய்க்கிழமை செம்மலை மகா வித்தியாலயத்தில் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டுக் கண்காட்சி ஒன்று நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## எண்ணெய்குதங்கள் இன்மையால் மக்கள் சிரமம்

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் எண்ணெய்க் குதங்கள் இல்லாமையால், எண்ணெயைச் சேமித்து வைப்பதில் பாரிய பிரச்சினையை மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

கடந்தகாலப் பகுதியில் ஏற்பட்ட வலம்புரி இராணுவ நடவடிக்கை மூலம் பூநகரியைக் கைப்பற்றிய இராணுவத்தினர் - பூநகரியில் இருந்த எண்ணெய்க் குதங்களை அழித்தமை குறிப்பிடத்தக்கது.

## மீன்பிடி அலுவலகம் திறக்கப்படவில்லை

மன்னார் விடத்தற்தீவுப் பகுதியில் கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மீன்பிடி பரிசோதனைக்கான அலுவலகம் இதுவரை திறக்கப்படவில்லை.

இதனால், இந்தப்பகுதி கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன், இந்த அலுவலகத்தை திறந்து வைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை கொள்ளாமல் இருப்பதையிட்டு விசனமும் தெரிவித்துள்ளனர்.

## பொது இடங்களில் சிரமதானப் பணிகள்

வட்டக்கச்சி- மாயவனூரில் வரட்சி நிவாரணத்தின் கீழ் பொது மயானம், பாடசாலை, பொதுமண்டபக்காணி, முன்பள்ளிச் சுற்றாடல், மயானவீதி போன்றன சிரமதானத்துக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தச் சிரமதானப்பணியானது, அந்தப் பிரதேச கிராமசேவையாளர் ஜோன்ஜெயநாதன் தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. (9)

## நிகொட் திட்டத்தின்கீழ் கிராமங்கள் புனரமைப்பு

மன்னார் மாவட்டத்திலுள்ள 5 கிராமங்கள் நிகொட் திட்டத்தின் கீழ புனரமைக்கப்பட்டு வருகின்றன. இப புனரமைப்பு வேலைகளுக்கான நிதியை உலக வங்கி வழங்கியுள்ளது.

தலைமன்னார், இசைமலைத்தாழ்வு, கொக்குப்படையான், விடத்தற்தீவு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களே இந்தத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் கிராமங்களில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடததக்கது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிழல் இதழ் வெளிவந்துள்ளது

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் முதல் வெளியீடான 'நிழல்' சமூக பொருளாதார அபிவிருத்தி இதழ் நேற்று வெளியிடப்பட்டது.

தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனையைத் தாங்கிவெளிவந்துள்ள இந்த இதழில் , போரால் பாதிக்கப்பட்ட சிறார்களின் நல்வாழ்வுக்காக - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்தும் கல்வி, தொழிற் கல்வி, அபிவிருத்தி நிறுவனம் என்ற பிரதான தலைப்பும் - யாழ்ப்பாண பல்கலைக்கழக முதலாம் வருட மாணவி ஆ.அனுராதாவின்- 'பல்கலைக்கழகத்துக்கு நாங்கள் தெரிவாவதற்கு இனிய வாழ்வு இல்லமே காரணம்' என்னும் தலைப்பிலான கட்டுரையும் -

தட்டுவன்கொட்டிக் கிராம அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தத்தில் தமிழர் 'புனர்வாழ்வுக்கழகம்- ஜி.ரி.இசற் கைச்சாத்து' என்ற தலைப்பில் முக்கிய செய்திகளுடன் வைத்திய கலாநிதி பா.யூடி எழுதிய 'உடற்பயிற்சியும் சுகமான வாழ்வும்' என்ற தலைப்பிலான மருத்துவக் கட்டுரையும், பு.சத்தியமூர்த்தி எழுதிய 'பற்றாக்குறைகளிலிருந்து முதலிடத்துக்கு' என்ற தலைப்பிலான கட்டுரை மற்றும் வேலணையூர் சுரேஸ் எழுதிய 'ஆதிவாசிகள் போல் வாழும் மக்கள் அவலங்கள் தீர்வது எப்போது?' என்ற தலைப்பிலான கட்டுரையும், கிராம தரிசனமும், தமிழ் மக்களுக்காகப் பணிபுரியும் அவுஸ்ரேலிய பெண்மணி மார்க்கிரட் பரராஜசிங்கமுடனான நேர்காணல், அ.சுமன் எழுதும் 'கணினியில் ஓர் துளி', அன்ரன் அன்பழகன் எழுதிய 'உதயமாகியது ஒலிம்பிக்' என்னும் ஆக்கமும், வணபிதா எ.றெஜினோலட்டுடனான உளவளம் பற்றிய செவ்வி என்பவற்றுடன், உதவும் கரங்கள், கவிதைக் கனிகள், விழிப்புடன் இருப்போம் உட்பட பல்வேறு சிறப்பம்சங்களைத்தாங்கி வெளிவந்துள்ளது.



அண்மையில் வட்டக்கச்சி மாயவனூரில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தை படத்தில் காணலாம். (படம்: வே.சீலன்)

# பொதுநோக்கு மண்டபம் ஊரியானில் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஊரியான் கிராமத்தில் நிகொட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்தை, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

பொதுமண்டபத்தைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய அரச அதிபர் - ஊரியான் கிராமமானது, இரணைமடுக்குளத்தின் நீர் வழங்கல் பகுதியின் இறுதியில் அமைந்துள்ளது. இதனால், இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து, தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, இந்த விவசாயிகளின் துன்பங்களைக் கருத்திற்கொண்டு, அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் விரைவில் தீர்த்து வைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தின உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி திறந்துவைக்கப்பட்ட இந்த பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்றுதினங்கள் இடம் பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை வெல்லும்சொல் இன்மை அறிந்து.* திருக்குறள்

# நமது நோக்கு

## ஜனாதிபதியின் ஐ.நா. உரையும் ஹெல உறுமயவின் கண்டனமும்

ஐக்கிய நாடுகள் சபையில் ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பாக பேரினவாத சிங்கள பௌத்த அரசியற் கட்சியான ஹெல உறுமய கடும் கண்டனம் ஒன்றை விடுத்துள்ளது.

ஜனாதிபதியின் ஐ.நா. உரை சிறுபிள்ளைத்தனமான தாம்... விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அது நியாயப்படுத்துகின்றதாம். அதுமட்டுமல்ல, பயங்கரவாத நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் தொடர்வதற்கு உற்சாகமூட்டுவதாகவும் அமைந்துள்ளதாம்!

இதுதான் ஹெல உறுமய காரரின் குற்றச்சாட்டாகும். ஹெல உறுமயவின் இந்தக் கண்டனம் அர்த்தமற்றதும், பைத்தியக்காரத்தனமான உளறலுமாகும்.

ஐ.நா.வில் அவர் ஆற்றிய உரையின் உள்ளீடு - வெளிப்பார்வைக்கு அவரை ஒரு சமாதான விரும்பியாகவும், உண்மையைப் பேசுபவராகவும், நியாயத்துக்கு குரல் கொடுப்பவர் போலவும் காட்டினாலும் - உண்மையில் அது விடுதலைப் புலிகளுக்கு எதிரான, சமாதானத்தைக் குழப்பும் நோக்கிலான கருத்தியல் செய்திகளையே கொண்டுள்ளது எனலாம்.

ஏற்கனவே, இவரது உரை தொடர்பாக கருத்து வெளியிட்ட தமிழத்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் - ஜனாதிபதி ஐ.நா.வில் உரையாற்றியவிதம் நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்றை உருவாக்கும் அவரது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளமையை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

அமெரிக்காவையும், இந்தியாவையும் தன்பக்கம் கவர்ந்திழுத்து வைத்துக்கொண்டு அரசாங்கம் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் திட்டத்துடன் நகர்வுகளை மேற்கொள்கின்றதோ என்ற தோற்றப்பாட்டையே ஜனாதிபதி சந்திரிகாவின் அந்த உரை மிகத் தெளிவாக விளக்கிநிற்கிறது என்றும், சிவாஜிலிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

நிலை இப்படியிருக்க ஹெல உறுமய காரரின் கதை வேறுவிதமாக இருக்கிறது. ஜனாதிபதியின் ஐ.நா.உரை முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துப்பிரசாரத்தை முன்வைக்கும் நோக்கத்தையே கொண்டதாகும்.

புலம்பெயர்ந்துவாழும் ஏழு லட்சம் தமிழர்களிடம் இருந்து தலா பத்து அமெரிக்க டொலர் வீதம் புலிகள் நிதியாகப் பெறுகிறார்களாம். அப்படிப்பெறும் முழுத் தொகையும் கூட்டினால் அரசுகொள்வனவு செய்யும் ஆயுதங்களுக்கான நிதியொதுக்கீட்டை விடவும் அதிகமானது என்று கூறும் ஜனாதிபதி இதன்மூலம் விடுதலைப் புலிகளுக்கான நிதிவழங்கலைத் தடைசெய்யுங்கள். என்ற செய்தியையே சர்வதேச நாடுகளுக்கு தெரிவுபடுத்த முனைந்துள்ளார் என்பது தெளிவு.

ஆனால், இதனூடாக அவர் இன்னொன்றையும் ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது தமிழ் மக்களுக்கு எதிரான போரை நடத்துவதற்கு தமது அரசு எழுபது லட்சம் அமெரிக்க டொலர் வரையிலான தொகைக்கு ஆயுதக்கொள்வனவு செய்கின்றது என்பதே அதுவாகும்.

விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்கோரிக்கையை கைவிடவேண்டும் எனக்கோரும் ஜனாதிபதியால், தமிழர்களின் அன்றாடவாழ்வியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் விதத்தில் இடைக்கால நிர்வாக அதிகார சபைபோன்ற தற்காலிக கட்டமைப்பு ஒன்றைக்கூட வழங்கமுடியவில்லை...வழங்க விருப்பமும் இல்லை என்பதை இந்த நிலையில் உலக சமூகம் உணர்ந்து கொள்வதும் அவசியமாகும்.

அவரின் உரை - விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் விட்டுக்கொடுப்புக்களைச் செய்யமறுக்கிறார்கள் என்ற தொனியையே கொண்டதாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உண்மையில் சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதியுடன் ஒத்துழைக்க மறுப்பவர்களும் எதிர்ப்புத் தெரிவிப்பவர்களும், ஜே.வி.பியினரும், ஹெல உறுமயவினரும் தான் என்பது உலகறிந்த உண்மையாம்.

ஆனால், ஜனாதிபதி இவர்களின் சமாதான எதிர்ப்பு பணி குறித்து ஐ.நா.உரையில் எதுவும் வாய்திறக்கவேயில்லை.

எனினும், 1983 இன் இனக்கலவரத்துக்கு சிங்கள இனவாதிகள்தான் காரணம் என்று அவர் கூறியதுதான் ஹெல உறுமயவினருக்கு கடுப்பை ஏற்படுத்தியுள்ள விடயமாகும். இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பதாக அவர் அங்கு கூறியது பொய்யான விடயமாம்!


அப்படியொரு இனமுறுகல் நிலையிருந்தால் பெருமளவு தமிழ் மக்கள் தென்பகுதியில் எப்படிவாழமுடியும்? என்பதே ஹெல உறுமயவின் கேள்வி...

1958, 1960,1977, 1981 என 1983 வரை தென்பகுதியில் தமிழ் மக்கள் வன்செயல்களுக்கு உள்ளாக்கப்பட்டமைக்கு என்னதான் காரணமாம்!

போரை நேசிக்கும் ஜனாதிபதியும், சமாதானத்தை எதிர்க்கும் ஹெல உறுமயவினரும் தங்களுக்குள் மோதிக்கொள்வதாக பாசாங்கு காட்டுகிறார்கள் என்பதே உண்மையாகும்.

இருதரப்பு இலக்கும் தமிழர்கள்தான் என்பதே இன்றைய அரசியல் யதார்த்தம். நான் சமாதானம் பேசுவதுபோல் நடிக்கிறேன், நீ அதனை எதிர்ப்பது போல் நடி... இப்படியே பிரச்சினையை இழுத்தடித்து விடலாம் என்பதே பேரினவாத சக்திகள் தங்களுக்குள் முரண்படுவதுபோல் செயற்படக்காரணம் என்பது தமிழினம் அறியாத விடயமல்ல...

# நாடும் நடப்பும்




# யாழ். மாநகர சபையால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

**கீழ்ப் பிரிவு கட்டுரைப் போட்டியில் -** 1ஆம் இடம் - சியாம் செஞ்யூட் சுதர்சினி, அஜந்தன், (சென் பற்றிக்ஸ் கல்லூரி) 2ஆம் இடம் - செந்தில்நந்தன், ஜனனி (வைத்தீஸ்வராக் கல்லூரி), 3ஆம் இடம் - ஜெகதீஸ்வரன் சர்மிளா ( யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவுக் கட்டுரைப் போட்டியில் -** 1ஆம் இடம் திபேரியல் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), 2ஆம் இடம் செல்வராஜா சுதர்சனா (கனகரத்தினம் மகாவித்தியாலயம்), 3ஆம் இடம் - டில் சாந்தி ஜேசுதாசன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு பேச்சுப்போட்டியில் -** 1ஆம் இடம் - சௌந்தரம் ஜோசச்சுதன் (சென்.பற்றிக்ஸ்கல்லூரி), 2ஆம் இடம் - ஜீவதாஸன் அஜந்தா (வேம்படி மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் - றோக்பெர்னாண்டோ றொசான் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த சனசமூக நிலையங்களுக்கான தெரிவில் 1ஆம் இடத்தை நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையமும், 2 ஆம் இடத்தை கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையமும், 3ஆம் இடத்தை அரியாலை சனசமூக நிலையமும், சிறந்த தேனீர்ச்சாலையாக - கோவில் வீதியிலுள்ள 'வள்ளி விலாசும்' சிறந்த உணவகமாக - வண்ணார் பண்ணை சிவன் கோவிலடியிலுள்ள 'தாமோதர விலாசும்' சிறந்த வெதுப்பகமாக - ருவிங்கிள்ஸ் ஸ்ரார் வெதுப்பகமும் தெரிவாகியுள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு ஒக்ரோபர் 4 ஆம் திகதி நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## துமிந்த சில்வாவை பிணையில் செல்ல நீதிவான் அனுமதி

ஐக்கிய தேசியகட்சியின் மேல்மாகாண சபை உறுப்பினர் துமிந்த சில்வாவை பிணையில் செல்ல கொழும்பு பிரதான நீதிவான் அனுமதித்துள்ளார்.

சில குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய நிலையில் விளகக மறியலில் வைக்கப்பட்டிருந்த அவரை நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தன நேற்று பிணையில் செல்ல அனுமதித்தார்.

பிரதிவாதி மேற்கொண்டதாக கூறப்படும் பாலியல் துஷ்பிரயோகமானது சுமார் ஒன்றரை வருட காலத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்ட போதும், அந்தக் காலப்பகுதியில் அது இடம் பெறவில்லை என்பதை மருத்துவ அறிக்கை உறுதிப்படுதது வதாக பிரதிவாதியின் சட்டத்தரணிகளான ஜனாதிபதி சட்டத்தரணி தயாபெரேரா, நளின் லத்துவஹெட்டி சுகத் பெரேரா ஆகியோர் மன்றில் சுட்டிக்காட்டினார்.

## கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரிப்பு

யாழ் மாநகரசபைக்குட்பட்ட நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலை அண்டிய வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

காலை வேளைகளில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துககு இக்கட்டாக்காலி நாய்களால் பெரும் தொல்லைகள் ஏற்படுகின்றன. சட்டநாதர் சிவன் கோவிலுக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் இக்கட்டாக்காலி நாய்களால் தினமும் வீதி விபத்துக்கள் ஏற்படுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்தோடு வீதிகளில் செல்கின்ற வாகனங்களுக்காக கரையொதுங்கும் மாணவர்கள் இந்த நாய்களினால் தொல்லையை அனுபவிக்கின்றார்கள். இவ்விடயம் தொடர்பாக தாம் யாழ் மாநகரசபையினருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# பல்கலை ஊழியர்களின் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளதையடுத்து, யாழ்.பலகலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது, பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக்குழுவுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

குறைந்த சம்பள மட்டத்திலிருந்து தொழிற்சங்க கூட்டுக்குழு சிபார்சு செய்தவாறு முழுமையான இடர்காலப்படியை வழங்குதல்.

திஸ்ஸ தேவேந்திரா சம்பள ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைகளை ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் புதிய சம்பளத்திட்ட சுற்றுநிருபத்தை டிசம்பர் 15ஆம் திகதிக்கு முன்பு சமர்பபித்தல், புதிய சம்பளத் திட்ட அமுலாக்கத்தை 1.1.2004 ஏற்படுத்தல்.

புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கும் மாதாந்த இழப்பீடுப்படியை வழங்குதல் போன்றவை மானிய ஆணைககுழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதற்கு பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழு தீர்மானித்திருந்தது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களும் தமது வேலைநிறுத்தத்தை கைவிட்டுள்ளனர்.

இதுபற்றி கருத்துத் தெரிவித்த யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.தங்கராசா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களும் தமது பணிகளில் ஈடுபடுவார்கள் எனவும் இது வரை காலமும் தாம் மேற்கொண்ட இவ்வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவுதந்த பொது அமைப்புக்கள் உட்பட அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்தார்.

## 62 வெளிநாட்டவர்கள் பொலிஸாரால் கைது

போலி வீசா அனுமதிப்பத்திரங்களுடன் வெளிநாடு செல்வதற்காக கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த 62 வெளிநாட்டவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 62 பேரும் பங்களாதேஷ் பிரஜைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர், இவர்கள் ஒவ்வொருவரும் தலா 10 லட்சம் ரூபாவைச் செலுத்தி ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு செல்வதறகு தயாராகவிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பிரிவில் 100 பேர் இணைந்துகொண்ட பின்னரே குறிப்பிட்ட வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

## காலியில் பாடசாலை அதிபர் ஒருவர் லஞ்ச ஊழல் அதிகாரிகளால் கைது

சுமார் 11 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துத் தொடர்பாக உரிய விளக்கத்தைத் தராத குற்றச்சாட்டின் பேரில் காலியில் பாடசாலை அதிபர் ஒருவரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்ட அவர், காலி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதன் பின்னர் அவரை 10 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இதேவேளை பிரதிவாதியை ஒக்ரோபர் முதலாம் திகதி கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

வாரநோக்கு யாழவன்

# விட்டுக் கொடுத்தே - ஏமாந்த தமிழினம் இனியும் ஏமாறுவதற்கு தயாராகவில்லை.



பயங்கரவாதத்துக்கு ஒரு போதும் வன்முறை வழியிலே தீர்வு கண்டு விடமுடியாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ்சை சாடியிருக்கிறார், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. இந்தச் சாடலானது ஊருக்கடி உபதேசம் உனக்கல்லடி எனும் பாணியிலேயே அமைந்துள்ளது.

நாளுக்கு நாள் ஒவ்வொரு அர்த்தமுடன் புதுப்புது அறிக்கைகளை வெளியிட்டு வரும் சந்திரிகாவின் இனனொரு பசப்புத் தனமான வார்த்தையாடலாகவே இதனை நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில், இலங்கையில் நின்று அவர் வெளியிடும் கருத்துக்களுக்கு நேர்மாறாகவே மேற்கண்ட கருத்து அமைந்துள்ளது.

தம்மை தொடராக சந்திக்கும் சர்வதேச பிரதிநிதிகளிடம் தமது சமாதான வேட்கையைத் தெளிவாக விளக்கிவரும புலிகள் - அரசும் இதயசுத்தியோடு சமாதானப் பணியிலே ஈடுபட முன் வரவேண்டுமென, இந்தப் பிரதிநிதி களின் மூலமாகவும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் அரசோ, குறிப்பாக ஜனாதிபதி சர்வதேச பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னா புலிகள் பேச்சுக்கு வரத்தயாராகவில்லை, அவர்கள் போரையே விரும்புகிறார்கள என அறிக்கை விடுத்து, தொடர்ந்தும் வன்முறையைப் பரப்பவே திட்டமிடுகிறார்.

இந்த நிலையில் ஐ.நா சபையிலே சமாதான தினத்தன்று பேசிய ஜனாதிபதி சந்திரிகா சர்வதேச சமூகத்தினுடைய காதிலே பூ சுற்றுவதற்காக நல்ல பிள்ளைத்தனமாக நடந்து கொண்டுள்ளார். ஆனாலும் அமெரிக்காவை எச்சரிக்கும் அளவுக்கு ஜனாதிபதிக்கு பிறந்துள்ள துணிவானது வரவேற்கத்தக்கதே. ஆனால், அதே அமெரிக்காவிடமிருந்து போர்க்கப்பல்களையும், இராணுவப் பயிற்சிகள், ஆலோசனைகளையும் சமாதான காலத்தில் பெற்றுக் கொள்ளும் போது இந்த அறிவு எங்கே போனது என்பது தான் இன்று எம்முன் எழுந்துள்ள கேள்வியாகும்.

இதே அமெரிக்காவை வைத்து அவ்வப் போது கருத்துக்கள் மூலமாக புலிகளை எச்சரித்து வரும் ஜனாதிபதி, சில சர்வதேச அரசுகளை பயன்படுத்தி, புலிகள் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டுமெனவும், அழுத்தம் கொடுத்து வருகின்றார். ஆனால், புலிகள் ஜனாதிபதியின் இந்த அழுத்தத் துக்கு தமது சமாதான தினச் செய்தியின் மூலமாக தக்க பதிலைக் கொடுத்துள்ளனர்.

அதாவது தனிநாடு பிரிவினையைக் கோரி வந்த விடுதலைப்புலிகள் இன்று இணக் கப்பாட்டுடன் செல்வதற்கு சமாதான வழிக்குத் திரும்பியுள்ளனர். இதுவே பெரியதொரு விட்டுக் கொடுப்பாகும். இதனை விடுத்து மேலும் இன்னும் எதை விட்டுக் கொடுக்க வேண்டுமென ஜனாதிபதியும், அவரோடு இணைந்து பாடும் பிரமுகர்களும எண்ணுகிறார்களோ தெரியவில்லை.

இந்தப் பிரமுகர்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றை அதிலிருந்து புரிந்து கொள்வார்கள எனின், மீண்டும் மீண்டும் புலிகள் விட்டுக் கொடுக்க வேண்டுமென வீணாகப் பேசமாட் டார்கள். என்றைக்கு இலங்கை வெளிநாட்டவர் களுடைய ஆளுகைக்கு உட்பட்டதோ, அன்றிலிருந்து இன்றுவரை தமிழர் தரப்பு பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்த வண்ணமேயுள்ளது. ஆனால், இனியும் விட்டுக்கொடுப்புக்கு தமிழர்கள் தயாராகவில்லை. ஏனெனில் அவர்கள தொடர்ந்தும் ஏமாளிகளாக இருப்பதற்கு வெறும் முட்டாள்களல்ல.

இலங்கை பிரித்தானியருடைய ஆட்சிக்கு உட்படுவதற்கு முன்னர் பல நிர்வாக அலகுகளைக் கொண்டதாகவே இருந்து வந்தது. அதன்படி வடக்கு-கிழக்கு பகுதிகளிலே தமிழர்களுடைய இராச்சியங்களே இருந்து வந்தன. ஏன் பொலநறுவை, மலையகம் ஆகிய பகுதிகளிலும் தமிழர்களுடன் தொடர்புடையவர்களின் ஆட்சியே நடைபெற்று வந்தது. ஆங்கிலேயர் இலங்கை வந்து, சிங்கள இராசதானிகளை தம்வசப்படுத்திய போதும் தமிழ் மன்னர்கள் கைவசமிருந்த இராச்சியங்களை அவ்வளவு இலகுவாகப் பறிக்க முடியவில்லை.

இறுதியில் தற்போதைய நிலைமையில் உள்ளது போல சில புல்லுருவிகளைப் பயன்படுத்தி தமிழ் அரசுகளை வீழ்த்தி, தமது நிர்வாக சுலபத்துக்காக இலங்கையில் முன்னிருந்த நிர்வாக அலகுகளை மாற்றி அமைத்தனர். இதனால் தமிழர்களுடைய தாயக நிலப்பரப்பானது சுவீகரிக்கப்படும் அபாய நிலை தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்தது.

பின்னர் 1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறும் போது இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை சிங்களவர் களிடம் விட்டுச் சென்றது மட்டு மல்லாது, யாப்பியல் ரீதியாக தமிழர்களை சிறுபான்மை எனக் குறியிட்டும் சென்றனர். இதனை ஆரம் பத்திலே கண்டுகொள்ளாது, தமிழ் தலைவர்கள விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு வந்தனர். அன்று ஆரம்பித்த விட்டுக்கொடுப்பு வரலாறு தொடர்ந்து இன்று பேச்சுவார்த்தையிலேயே வந்து நிற்கிறது. இதுவே தமிழர்களுடைய இறுதி விட்டுக்கொடுப்பாக இருக்கும். ஆண்ட இனம் மீண்டும் தமது தாயக மண்ணிலே தம்மைத்தாமே ஆள்வதையே கேட்கிறார்கள் அவர்கள் புதிதாக எதையுமே கேட்கவில்லை. பழையவற்றைத்தான் புதிய வடிவிலே கேட்கிறார்கள். ஆனால், முன்னதைக் காட்டிலும் இது அதிகார வலுக்குறைந்தது.

இதற்கும் இணங்கிப் போக சிங்கள அரசு தயாராகவிலலையெனில் வேறுஎன்ன செய்வது? என்றுமே விடாக்கண்டர்களாக விளங்கிய சிங்களத் தலைமைகள் தற்போது விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள். இவர்கள் ஒன்றைமட்டும் என்றுமே நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது இலங்கை சுதந்திரம் அடைவதிலே சிங்களத் தலைவர்களைக் காட்டிலும் தமிழ்த் தலைவர்களுக்கே அதிக பங்குண்டு என்பதுவே அந்த உண்மையாகும்.

சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன் .அருணாசலம் ஆகிய தமிழ்த் தலைவர்களின் அரிய முயற்சியின் பலனாகவே இலங்கை விடுதலை பெற்றது. ஆனால், சிலர் இந்தியா சுதந்திரமடைந்ததினாலேயே இலங்கைக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டதாகவும் கூறுகிறார்கள். எது எவ்வாறு இருப்பினும் இலங்கையின் சுதந்திரத்தில் தமிழர்களுக்கே அதிக பங் குண்டு.

ஆனால் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஒரு தவறை இழைத்து விட்டார்கள். அதன் வெளிப்பாடே இன்று தமிழர்கள் ஊர் ஊராக, நாடு நாடாக அலையவேண்டிய நிலை தோன்றக காரணமாகிவிட்டது. இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கிய போது முஸ்லிம்கள் தமக்கு தனி அலகு கோரியமையால் ஒரு பகுதி பிரிக்கப்பட்டு, பாகிஸ்தான் எனப் பெயரிடப்பட்டு, முஸ்லிம்கள வசம் வழங்கப்பட்டது. அதே போன்று அன்று ஈழத்தமிழர்களும் தமக்குத் தனி அலகு கோரியிருப்பார்களே ஆயின், இன்று தனிநாடாக தமிழீழம் தலைநிமிர்ந்து நிற்கும். ஆனால், என்றுமே நம்பிக் கெட்ட இனமாக தமிழினம் அன்றும் சிங்களவர்களை நம்பிக் கெட்டது. இணங்கி எல்லோரும் ஒன்றாக வாழ்வோம். எனவே சிறிய இலங்கையை மேலும் இரு கூறாக்க விரும்பாது, அகில இலங்கை காங்கிரஸ் எனும் கட்சியை தாபித்து அதற்கு தமிழரான சேர்.பொன்.அருணாசலமே தலைவராகவுமிருந்தார். ஆனால் பின்னைய நாளில் தமிழர்களிடையே விட்டுக்கொடுப்பு, மனப்பாங்கு காரணமாக இந்த தலைமைப் பதவியானது பல கைகள் மாறி இறுதியிலே இந்தக் கட்சியே அடியோடு அழிந்துபோக பெரும் பான்மை இனம் எனும் போர்வையிலே சிங்கள அரசுகள் ஆட்சிப்பீடமேறின.


ஆனாலும், தமிழர்கள் தமது உரிமைகளை மறக்காது, அவற்றுக்காக தொடர்ந்து குரல் கொடுத்த வண்ணமேயிருந்தன. தந்தை செல்வாவின் தலைமையில இயங்கிய தமிழர் அணி பல்வேறு ஒப்பந்தங்களை சிங்கள அரசுகளுடன் செய்தது மட்டுமன்றி பல விட்டுக கொடுப்புக்களையும் செய்தது. இவ்வாறானவையே பண்டா - செல்வா மற்றும் டட்லி - செல்வா ஒப்பந்தங்கள். ஆனால் இவை யாவும் பின்னர் சிங்கள அரசுகளால் கிழித்தெறியப்பட்டன.

ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டது மட்டுமன்றி, தமிழர்கள் மீது வன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன. 1956, 1977,1983 ஆம் ஆண்டுகள என இனக் கலவரங்கள் தூண்டப்பட்டு ஆயிரக்கணக்கிலே தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதுமின்றி, கோடிக்கணக்கான பெறுமதியான தமிழர் சொத்துக்களும் சூறையாடப்பட்டன. தமிழ்ப் பெண்கள் மான பங்கப்படுத்தப்பட்டனர். தமிழ் மாணவர்கள் தரப்படுத்தலின் மூலமாக பல்கலைக்கழக அனுமதி பெற முடியாது தடுக்கப்பட்டனர்.

இவற்றின் விளைவாக இறுதியில். தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழர் தரப்பு ஆயுதம் ஏந்த வேண்டிய இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டதுடன், பிரிவினை கோரப் போராட வேண்டிய நிலைக்கும் உட்படுத்தப பட்டார்கள். ஆனாலும் தமிழர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் விட்டுக் கொடுப்புக் களுடன் கூடிய சமாதான நகர்வுகளைத் தொடர்ந்து வந்தனர்.

இதன் ஒரு கட்டமாக ஒரு நிலையில் விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களையும் ஒப்படைத்து, சமாதான வழிக்குத் திரும்பினர். ஆனால் இவற்றைக் கருத்திற்கொள்ளாத நிலையினால் என்றுமே இனி ஆயுதத்தைக் கை விடக்கூடாது எனும் திடசங்கற்பத்தை ஏற்படுத் திக் கொண்ட தமிழர்கள் இன்று மிகப் பலம் வாய்ந்த இராணுவ அணியாக பலம் பெற்றுள் ளனர்.

தற்பாதுகாப்புக்காகவே ஆயுதம் ஏந்திய புலிகள் - தமது இலக்கை அடைவதற்கு சமாதான வழியையே பின்பற்ற விரும்பினர். இதனாலேயே தியாகி திலீபன் கூட தனது அஹிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்தார். இன்று தமிழர் தரப்பு விடுக்கும் கோரிக்கை



களை 1987 ஆம் ஆண்டுகளிலே முன் வைத்து போராடினார் திலீபன். ஆனால் அந்த விட்டுக் கொடுப்பைக் கூட கருத்திலே எடுக்காது தவறு இழைத்தது இந்தியா.

மீண்டும் 1994 ஆம் ஆண்டிலே ஒரு வட்டுக கொடுப்பு இனி 2004 ஆம் ஆண்டில் இனியும ஒரு விட்டுக் கொடுப்பா? அப்பப்பா போதுமப்பா விட்டுக் கொடுப்பு தமிழர தரப்பை விட்டுக் கொடுப்புடன் செயற்படக் கோரும் புறச்சக்திகள். அவர்கள் கோரும் விட்டுக் கொடுப்பை தமிழர் தரப்பு செய்தவுடன் மேற்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, விலகிக் கொள்கின்ற துர்ப்பாக்கிய சூழ்நிலையே இதுவரை இருந்து வந்துள்ளது. இனியும் அந்த நிலை தொடருமாக இருந்தால், இதுவரை விட்டுக் கொடுத்த தமிழர்கள் - இனியும் பணிய தயாராகமாட்டார்கள.

தமிழர் தரப்பு பல தடவைகள் விட்டுக் கொடுத்துள்ள போதும், குறிப்பிடக்தக்க வகையிலே ஒரு தடவையாவது விட்டுக் கொடுக்காத சிங்களத் தரப்பு இந்தமுறை விட்டுக் கொடுத்தாலென்ன. ஏனெனில் தமிழர்கள் இன்று கெஞ்சும் நிலையில் இல்லை. தற்போதைய அரசு இறுதித் தீர்வு பற்றி பேசும் தனது நிலைப்பாட்டை விட்டுக் கொடுத்து, இடைக்கால நிர்வாக வரைவுத்திட்ட அடிப்படையிலான பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும்.

அது மட்டுமன்றி ஜே.வி.பி - ஹெல உறுமய போன்றவர்களும் தமது பச்சை இனவாதத்தை விட்டுக் கொடுத்து, கொள்கைப் பற்றுடன் செயற்பட முன்வரவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக பரம்பரை அரசியல எனவும் நான் பெரிது, நீ பெரிது எனப் போட்டி போடும் சிங்களத் தலைமைகள் தமது அரசியற போட்டிகளை விட்டுக் கொடுத்து, நாட்டு நலன்களுக்காக ஒன்றுபடவேண்டும். இவையனைத்தும் நிறைவேறுமாக இருந்தால், தமிழர்கள் விட்டுக் கொடுக்க வேண்டுமென எவரும் எதிர்பார்க்க முடியாது!

## தமிழ் மக்களின் இன்றைய எழுச்சி நிலைக்கு தியாகி திலீபனின் அற்புதமான அடித்தளம்!

(நேற்றைய தொடர்ச்சி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்தியா கையாள முற்பட்டதன் விளைவை தாம் மோசமாக எதிர்கொள்ளவேண்டி வரும் என்பதை அன்று உணரத் தவறிவிட்டதனால, திலீபனைச் சாகவிட்டு தம்மீது மாறாகக் கறையைப் பதித்துக்கொண்டது.

12 ஆம் நாள் காலை திலீபனின் உடல் நிலை மோசமடைந்துள்ள செய்தி காட்டுத்தீ போல் தமிழர் தாயகம் எங்கும் வேகமாகப் பரவியது. நாலாபுறம் இருந்தும் அலை அலையென மக்கள் திரண்டனர். திலீபனைக் கடைசி ஒரு தடவை பார்த்துவிடலாம் என்ற ஆவலுடன், அவன் இனி எப்போது எம்முடன் பேசுவான்? எழுந்து நடப்பான்? எங்களுக்கு ஆறுதல் சொல்வான்? எனக் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் செய்வதறியாது புலம்பினர். பரிதவித்துப் பார்த்திருக்க தம் கண்முன்னால் தியாகி திலீபனின் உயிர் (காலை 10.58மணிக்கு) பிரிந்தபோது அவர்கள எழுப்பிய அவலக்குரல் உலகையே உலுக்கியது. தமிழ் மக்களின் உள்ளக்குமுறல் அடங்க பல நாட்கள் ஆயிற்று.

தியாகி லெப் - கேணல் திலீபனின் தியாக உடல் தமிழர் தாயகத்தில் மக்கள் அஞ்சலிக்காகச் சென்றபோது மக்கள் கொடுத்த மரியாதை காலத்தால் அழிக்கமுடியாதவை ஆகும்.

உலகுக்கு நாகரிகத்தைத் தந்தவர்கள் தமிழர்கள். இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர். இந்தியாவில் ஏழு கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள். இவற்றை இந்தியா மதித்து நடந்திருக்கவேண்டும். வீணாக இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்டுத் தமிழ் மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டது. ஆயினும், இந்தியாவின் பிராந்திய நலன்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளோ, தமிழீழ விடுதலைப் போராட்டமோ குந்தகமாக இருக்காது என்பதனை வலியுறுத்தி வருகின்றனர். ஈழத்தமிழர்கள் எப்போதும் இந்தியாவை ஆதரித்து வருவதுபோல, இந்தியாவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கவேண்டுமென்பதே தமிழ்மக்களின் பேரவா?

கருமுகிலெனத் திரண்ட போர் மேகங்கள், குண்டுமழைகளை எம்மீது பொழிந்த போதும், ஆயிரமாயிரம் உயிர்களை, உடைமைகளை இழந்தபோதும், தமிழ் மக்கள் அஞ்சவில்லை. தலைவனின் பின்னே அணிதிரண்டு நின்றனர். அவர்கள் முன்னே எத்தனையாயிரம் படைகள் எங்கிருந்து வந்தாலும், தயங்கோம் எனப் புலிப்படை புயலாகி நின்றது. அவர்கள் பின்னே மக்கள் கூட்டம் அணிவகுத்து நின்றது. தமிழன் தலைநிமிர்ந்து நிற்கிறான்.

உடலிலே வெடிகுண்டைச் சுமந்து எதிரி முகாமில் வெடித்துச் சிதறிய கரும்புலிகளும், மார்பினில் குண்டேந்தி மண்ணை முத்தமிட்ட மறப்புலிகளும், கடலையே தீயால் வேகவைத்த கடற்புலிகளும் இந்த மண்ணில் வீளைகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் திலீபனும் அவனைப் போன்ற மாவீரர்களும்தான். அன்று திலீபன் சொன்னதை இன்று நினைத்துப்பார்த்தால் நடைமுறையில் காணமுடிகிறது.

இந்தத் தமிழினம் அடங்காது! அது போராடும் ஆயுதம் இல்லாவிட்டாலும், புல்லையும் எடுத்துப் போராடும். அடக்குமுறைக்கு அது வளைந்து கொடுக்காது, பேரம் பேசாது, விட்டுக்கொடுக்காது. ஆயுதம் இல்லாவிட்டாலும், உணவு இல்லாவிட்டாலும் இந்த இனம் தலைவணங்காது. அது தொடர்ந்து போராடும். தன்னுடைய விடுதலைக்காக, தனது நியாயத்துக்காக, தமது உரிமைக்காக அது எந்த சக்தியையும் எதிர்த்துப் போராடும் எனக்கூறினான். தூர நோக்கோடு அன்று சொன்ன அந்தச் செய்தி, இன்று யதார்த்தமாகிவிட்டது.

தனது இலட்சியத்தில் உறுதியாக நின்று தலைவனுக்கும், போராளிகளுக்கும், தமிழினத்துக்கும் பெருமை சேர்த்துச் சென்றிருந்தான். அவனது ஆற்றல் அனைவரையும் இன எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் என்பது உறுதி.

-முற்றும்.

## மொட்டை அடித்து வினோத போராட்டம்




பிலிப்பைன்ஸில் மருத்துவத் துறை ஊழியர்களின் போராட்டம் காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளிகள் சிகிச்சைபெற முடியவில்லை. டொக்டர்கள் வேலைக்கு வந்தாலும் மருந்து கொடுக்கவோ, ஊசி போடவோ ஆள் இல்லை. சம்பள உயர்வு கேட்டுத்தான் இந்தப் போராட்டம். இப்போது கிடைக்கும் சம்பளம் அவர்கள் குடும்பம் நடத்துவதற்குப் போதுமானதாக இல்லையாம்.

மணிபோ நகரில் உள்ள வைத்தியசாலை ஊழியர்கள் தங்கள் தலையை மொட்டை அடித்து சம்பளத் தொகையை தங்கள் மொட்டைத்தலையில் எழுதி வினோதப் போராட்டம் நடத்தினார்கள்.

# ஈராக்கில் வன்செயல் நடைபெறும் பகுதிகளில் தேர்தல் இடம்பெறாது

## அமெரிக்க பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(வொஷிங்ரன்)

ஈராக்கில் அடுத்தவருடம் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலின் போது அந்தநாட்டில் வன்செயல்கள் இடம்பெற்றுவரும் சில பிரதேசங்களில் தேர்தல் நடத்துவதற்குச் சாத்தியமில்லை. ஆனால், மற்றைய இடங்களில் தேர்தல் நடத்தப்படுமென அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார். அமெரிக்க செனட் சபையில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் அடுத்தவருடம் ஜனவரி மாதம் ஈராக்கில் தேர்தல் நடத்தவுள்ளோம். அங்கு சில இடங்களில் வன்செயல்கள் நடப்பதனால் அப்பகுதிகளில் தேர்தல் நடத்தப்படமாட்டாது. எனவே, முற்றுமுழுதாகத் தேர்தல் நடத்தாமல் இருப்பதைவிட இவ்வாறு தேர்தல் நடத்துவது சிறந்ததுதானென அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும், ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவியும் அமெரிக்காவில் சந்தித்துக் கலந்துரையாடலை நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பின் பின்னர் ஈராக்கில் தேர்தல் ஒத்திப்போடப்படும் என்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென இருவரும் தெரிவித்தனர்.

இநதச் சந்திப்பின் பின்னர் அமெரிக்க காங்கிரஸில் உரையாற்றிய ஜனாதிபதி புஷ் - அமெரிக்கர், ஈராக்கிய கிளர்ச்சிவாதிகளுக்கெதிரான தாக்குதலை நடத்தவேண்டியுள்ளது. ஏனெனில் அவர்கள் உலகத்தை அச்சுறுத்தும் வகையில் உள்ளனர். நாம் பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை நிறுத்துவோமாக இருந்தால் அவர்கள் அமெரிக்கா உடபட்ட ஏனைய சுதந்திரமான நாடுகள்மீது தாக்குதலை நடத்துவார்கள்.

ஈராக்கில் நாளை தேர்தல் நடத்துவதாக இருந்தாலும், அதனைச் செய்வதற்கு அமெரிக்கா தயாராகவே உள்ளது. ஈராக்கில் 18 மாகாணங்கள உள்ளன. அவற்றில் மூன்று மாகாணங்களிலேயே வன்செயல்கள் இடம்பெற்றுவருகின்றன. ஈராக் மக்களின் உதவிக்காக அமெரிக்கா எப்போதும் அவர்களுக்கு நன்றிக் கடனைச் செலுத்தும்.

இன்று ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்டதனால் நீங்க



ளும், நாங்களும் நலமாக உள்ளோம். ஈராக்கிற்குப் படைகளை அனுபபுவதென்பது சுலபமான விடயமல்ல. ஆனால், அதுவே சரியான வழியாகும் எனத் தெரிவித்தார்.

புஷஷுடனான சந்திப்பின் பின் கருத்துத தெரிவித்த இயட் அலாவி- ஈராக்கில் ஜனநாயகம், சுதந்திரம் என்பன மீளத்திரும்புவதாகவும், ஸ்திரத்தன்மை ஏற்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

# ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் இரு எகிப்திய பிரஜைகள் கடத்தல்




ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் வைத்து இரு எகிப்தியப் பிரஜைகள் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். கடத்திச்செல்லப்பட்ட இருவரும் பாக்தாத்தில் உள்ள ஹர்த்தியா என்கின்ற பகுதியில் உள்ள தொலைத்தொடர்பு சேவையை வழங்கும் நிறுவனம் ஒன்றின் ஊழியர்களாவர்.

குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வந்த தீவிரவாதிகள் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அச்சுறுத்திய பின்னர், இரு எகிப்திய ஊழியர்களையும் கறுப்புநிறக் கண்ணாடி பொருத்தப்பட்ட வாகனம் ஒன்றில் கடத்திச் சென்றுள்ளனர். இக்கடத்தலின் பின்னணியில் யார் உள்ளனர் என்பது தொடர்பான விடயங்கள் இதுவரையில் வெளிவரவில்லை.

இதேசமயம் எந்தத் தீவிரவாத அமைப்புகளும் இந்தக் கடத்தல் சம்பவத்திற்கு உரிமை கோரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று வாரங்களுக்குள் ஈராக் தலைநகர் பாக்தாத்தில் வெளிநாட்டவர்கள், முஸ்லீம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட மூன்றாவது சம்பவம் இதுவாகும்.

கடந்தவருடம் மார்ச்மாதம் முதல் ஈராக்கில் நூற்றிற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிப்பதற்குத் தீவிரவாதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஈராக்கிய இடைக்கால அரசு ஏற்றுக்கொள்ளாததை அடுத்து 27 வெளிநாட்டுப் பிரஜைகள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் ஈராக்கின பாதுகாப்பற்ற வீதிகளில் வைத்தே வெளிநாட்டுப் பிரஜகள் கடத்தப்பட்டதாகவும் - ஆனால், தற்பொழுது பாக்தாத்தின் மத்திய பகுதியில் வைத்தே பெரும்பாலான வெளிநாட்டவர்கள் கடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் ஈராக்கியச் சிறைச்சாலையில் உள்ள அனைத்துப் பெண்தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாதுவிட்டால், தம்மால் கடத்தப்பட்டுள்ள 62 வயது பொறியியலாளரை கொலைசெய்யப்போவதாக அபு முசாப் அல் வுர்காவி தலைமையிலான தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈராக்கில் உள்ள தீவிரவாதிகளால் வெளிநாட்டவர்கள் கடத்திச் செல்லப்பட்டுக் கொலைசெய்யப்படுவது ஈராக்கிய இடைக்கால அரசு எதிர்நோக்கியுள்ள பெரிய சோதனை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## இந்திய விஞ்ஞானி ராஜா ராமண்ணா நேற்றுக் காலமானார்



(புதுடெல்கி)

இந்தியாவின் மிகப் பிரபல்யமான அணு விஞ்ஞானி ராஜா ராமண்ணா தனது 79 ஆவது வயதில் மும்பாய் நகரத்தில் உயிரிழந்தார்.

பிரபல அணு விஞ்ஞானி ராஜா ராமண்ணா மும்பாயில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோதே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவின் முதன்மையான அணு ஆராய்ச்சி நிலையத்தின் தலைவராகக் கடமையாற்றிய இவரே இந்தியா முதன்முறையாக 1974 ஆம் ஆண்டு மும்பாயில் மேற்கொண்ட அணு ஆயுதப் பரிசோதனைக்கான திட்டங்களை வகுத்தவராவார்.

அணு ஆயுத விஞ்ஞானியான ராமண்ணா இந்திய அணுசக்தி மையத்தின் தலைவராகப் பதவி வகித்தவராவார். அத்துடன் இவர் இந்திய ராஜய் சபாவின் உறுப்பினராகவும், உதவிப் பாதுகாப்பு அமைச்சராகவும் செயற்பட்டவராவார்.

நியூயோர்க்கில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ள மன்மோகன் சிங் ராமண்ணா பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் - அணு ஆயுதப் பரிசோதனை நடவடிக்கைகளில் இந்தியா நெருக்கடியை எதிர்நோக்கிய வேளையில் இந்தியாவை வெற்றி நோககி வழிநடத்தியவர் எனத் தெரிவித்தார்.

## உலக நோக்கு

## போர் விமானம் விழுந்து நொருங்கியது விமானி அதிஷ்டவசமாக உயிர் தப்பினார்




(டெல்கி)

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான 'மிராஜ் 2000' ரக போர்விமானம் ஒன்று பறந்த சிறிது நேரத்திலேயே விழுந்து நொருங்கியது. ஆனால், அதிலிருந்த விமானி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

மத்திய பிரநேச மாநிலம் குவாலியர் நகருக்கு அருகில் விமானப் படைப் பயிற்சித்தளம் உள்ளது. இங்கு நேற்றுமுன்தினம் பகல் 12.45 மணியளவில் விமானப் படைக்குச் சொந்தமான 'மிராஜ் 2000' ரக போர்விமானப் பயிற்சிக்காகப் பறந்தது.

தரையிலிருந்து புறப்பட்ட சில நொடிகளில் அந்தப் போர் விமானத்தில் கோளாறு ஏற்பட்டு திடீரெனக் கீழே விழுந்து நொருங்கியது. எனினும் அந்த விமானத்தில் இருந்த பயிற்சி விமானி கில் என்பவர் வெளியில் குதித்து உயிர் தப்பிவிட்டார். உடனடியாக ஹெலிகொப்டர்கள் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். விமானம் நொருங்கி விழுந்த இடத்தில் எவருக்கும் எந்த உயிர்ச்சேதமும் இல்லை. இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## பன்றிகள் ஓட்டப்பந்தயம்



அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் செல்லப்பிராணிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள், அழகுப் போட்டிகள், அறிவுத்திறன் போட்டிகள நடைபெற்றுவருகின்றன. பன்றிகள், நாய், குதிரை, பூனை, எலி உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விலங்குகள் இதில் கலந்துகொண்டன. இதில் பன்றிகள ஓட்டப்பந்தயம் அனைவரையும் கவர்ந்தது. போட்டியில் கலந்துகொணட பன்றிகளில் 2 பன்றிகள் வெற்றி இலக்கைநோக்கி ஓடும் காட்சி.

## காஸாவிலுள்ள இஸ்ரேல் குடியிருப்பு பகுதிமீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் ஒரு பெண் பலி! மற்றொருவர் காயம்!

காஸாப் பகுதியிலுள்ள ஜெவிஸ் குடியிருப்புப் பகுதி மீது பலஸ்தீனக் கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றொருவர் காயமடைந்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

காஸாவின் தென்பகுதியிலுள்ள நேவ் டெக்கலாம் பகுதி குடியிருப்பு மீது நான்கு எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதன்போது எறிகணையொன்று வீட்டின்மீது விழுந்து வெடித்ததிலேயே இந்த உயிரிழப்புச் சம்பவம் ஏற்பட்டதாக இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலைத் தாமே நடத்தியதாக ஜிகாத் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கள் உரிமைகோரியுள்ளன. இந்தத் தாக்குதலையடுத்து இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனத்தின் கான் யூனுஸ் பகுதிமீது நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டபோதும், அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதற் சம்பவத்தையடுத்து அந்தப்



பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சாஉல் மொபாஷ் படையினருக்கு உத்தரவிட்டார். கடந்த சில தினங்களாக பலஸ்தீன மற்றும் இஸ்ரேல் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு!

சமாதான நடவடிக்கை தொடர்பாக, உத்தேச சர்வகட்சி ஆலோசனை சபையை அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாட வருமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நான்காம் திகதி இடம்பெறுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இந்தக் கலந்துரையாடலில் தமது கட்சி பங்குபற்றப்போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், சர்வகட்சி ஆலோசனைச் சபை மிகச் சிறந்த தீர்மானம் ஆயினும், அதனை ஸ்தாபிப்பதற்கு இது உரிய சந்தர்ப்பம் அல்ல எனவும் தெரிவித்தார்.

# சுவிற்சர்லாந்து தூதுவருடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் பேச்சு!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான சுவிஸ் தூதுவரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சுவிஸ் தூதுவராலயத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரயோசனையின் அடிப்படையில் சமாதானப்பேச்சை விரைவில் ஆரம்பிப்பதற்கான அழுத்தத்தை, சுவிஸ் போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சந்திப்பின்போது வலியுறுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

# தடைப்பட்ட இடத்தில் இருந்து பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும்

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்ட இடத்தில் இருந்து மீண்டும் தொடரவேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டுபேசிய அவர், சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதன் மூலம் அரசாங்கம் எதனையும் இழக்கப்போவதில்லை. இதனை மனதில் கொண்டு பேச்சுவார்த்தை மூலம் இறுதித் தீர்வு காணப்படுவது அவசியம் எனவும்கூறினார்.

மேலும் தற்போது விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊர்காவற்படையினரை விடுதலை செய்யுமாறு குரல் எழுப்புவதன் மூலம் பலன் கிட்டப்போதில்லை என விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் கைதிகளைப் பரிமாற்றிக்கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## போர் தவிர்ந்த வழி மூலமே...

தோன்றவில்லை. ஏனென்றால், இந்தப் பிரச்சினைக்கு போர் மூலம் இல்லாத ஒரு தீர்வுகாண எனது அரசு முழுமையான உறுதிப்பாட்டுடன் இருக்கிறது. ஏனெனில், ஆயுதம் தாங்கிய மோதலை - ஆயுதம் தாங்கிய தீர்வைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வைக்காண - பேச்சுக்களைத் தொடங்க எனது அரசு தான் 10 ஆண்டுகளுக்கு முன் நடவடிக்கை எடுத்தது.

அதன் பின்னர் பதவிக்கு வந்த அரசும் இதையே செய்தது. இந்த விடயத்தில் நான் சொல்லவருவது என்னவென்றால் - எனது கட்சியைப் பற்றி, விடுதலைப் புலிகளும் முதன்முறையாக ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தவிர பிறதீர்வுகள் பற்றியும் பரிசீலிக்கத் தயாராக இருப்பதான நிச்சயமான சமிக்ஞைகள் வெளியிட்டது போல தோன்றியது.

கேள்வி: இந்த சமாதான காலத்தில் பொருளாதார ரீதியான பலன்கள் இல்லாதபோது, தமிழ்மக்களுக்கு இந்த அமைதி முறையில் நம்பிக்கை தொடரும் என நினைக்கிறீர்களா?

பதில்: நிச்சயமாக அவர்களுக்கு நம்பிக்கை இருக்காது. இதனால்தான் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளின் பொருளாதார ரீதியான முன்னேற்றத்துக்கு நாங்கள் முன்னுரிமை கொடுத்திருக்கிறோம்.

அங்கு வீதிகள், மின்சாரம், நீர்ப்பாசனம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மீண்டும் கட்டி அமைக்க விடுதலைப் புலிகளின் கலந்தாலோசனைகள், உடன்பாடுகளுடன் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறோம்.

கல்வி, சுகாதாரம் போன்ற விடயங்களில்கூட மீண்டும் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறோம். இவையெல்லாம் 1994 இல் இருந்து 2001, 2002 வரையிலான காலகட்டத்தில், விடுதலைப் புலிகளின் எதிர்ப்புக்கிடையில் நடந்துகொண்டு தான் இருந்தன.

ஆனால், இப்பொழுது இவை மிகவும் வேகமாக நடக்கத் தொடங்கியிருக்கிறது. ஏனெனில், விடுதலைப் புலிகளும் இவை நடக்கவேண்டும் என்று உடன்பட்டிருக்கிறார்கள். ஆனால், இவை நான் விரும்பும் அளவுக்கு நடக்கவில்லை. ஏனெனில் அவை விடுதலைப் புலிகளின் வேகத்துக்கே நடக்க முடியும்.

கேள்வி: ஐநா. சபையில் தற்போது நடைபெற்றுவரும் சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்கொள்வது எப்படி என்ற ரீதியிலான விளக்கங்கள், விடுதலைப் புலிகள் மீதும், தற்போதைய அமைதி வழிமுறை மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனவா?

பதில்: நிச்சயமாக புலிகள் மீது பெரும் தாக்கத்தை விளைவித்துள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கம் பன்னாட்டு கருத்துணர்வு பற்றி மிகவும் கவலைப்படக்கூடிய இயக்கம் - நுட்பமான ஒரு இயக்கம்.

ஏனெனில், விடுதலைப் புலிகள் மேற்குலக நாடுகளில் வேலைசெய்துகொண்டிருக்கும் தமிழ்மக்களிடம் திரடடப்படும் நிதியை நம்பியிருக்கும் ஒரு இயக்கம். அவர்கள் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை கட்டாயமாக தரும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஏனென்றால் மேற்குலக நாடுகள் என்ன நினைக்கின்றன என்பது அவர்களுக்கு முக்கியமாகும்.

கேள்வி: நோர்வேயின் மத்தியஸ்தம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: யாருமே முழுமையாக - சரியாகச் செயற்பட முடியாது. ஆனால் பொதுவாக நான் இது குறித்து திருப்தியாக இருக்கிறேன்.

# அரசுக்கு எதிராக ஐ.தே.க. பேரணி!





(கொழும்பு)

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தவும் தேர்தல் காலத்தில் உறுதியளிக்கப்பட்டதைப்போன்று அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவும் அரசாங்கம் தவறியுள்ளதாகத் தெரிவித்து, ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. மூன்று இடங்களிலிருந்து ஆரம்பமாகிய எதிர்ப்பு ஊர்வலங்கள், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடைந்தன.

கோட்டை அரசமரச்சந்தி, மருதானை மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமான எதிர்ப்பு ஊர்வலங்கள் கொழும்பு கோட்டைப் பகுதியை வந்தடைந்ததும் பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

# இடைக்கால நிர்வாகத்துக்கு பெருமளவில் ஆதரவு

(கொழும்பு)

பி.பி.சி. சிங்களசேவை நடத்திவரும் - இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படவேண்டுமா என்ற கருத்துக் கணிப்பில் பெரும் எண்ணிக்கையானோர் ஆர்வத்துடன் பங்கேற்றுவருகின்றனர்.

பி.பி.சி சிங்களசேவை இணையத்தளத்தின் மூலம் நடத்தப்படும் இந்தக் கருத்துக் கணிப்பில் - இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுவதற்கு ஆதரவாக 43 ஆயிரத்து 483 பேரும், (65 வீதம்) எதிராக 23 ஆயிரத்து 382 (35 வீதம்) பேரும் தமது வாக்குகளை அளித்துள்ளனர்.

## நால்வரின்....

வெளியிட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாதுறு ஓயா காட்டுப் பகுதியில் நடமாடிய கருணாவின் மூத்த சகோதரர் றெஜி தலைமையிலான ஆயுதக்குழுவினர் மீது புலிகள் அதிரடித்தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் எழிலன் துமிலன் ஆகியோரும் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

எனினும், இந்தத் தாக்குதலில் ரவிநாதன், தியாகராஜா, நிலாம் ராஜா, செல்வ அம்மான் ஆகியோரும் உயிரிழந்ததாக இராணுவ வட்டாரங்கள் தகவல வெளியிட்டிருந்தன.

## சமாதான....

ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மே மாதம் இலங்கைக்கான விஜயத்தை பீற்றர்சன் மேற்கொண்டது முதல் இதுவரை, இலங்கையின் சமாதானச் செயற்பாடுகள் குறித்து பீற்றர்சனுக்கு ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

மேலும் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒஸ்லோ மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய தமிழீழ விடுதலைப் புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்றும், மாற்று இயக்கத்தினரைக் கொலை செய்வதை விடுதலைப் புலிகள் நிறுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனை சபை எதிர்வரும் ஒக்ரோபர் 4 ஆம் திகதி கூடவுள்ளதாகவும் ஜான் பீற்றர்சனிடம் ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

இந்தத் தேசிய ஆலோசனைச் சபையில் எதிர்க்கட்சித் தலைவர்கள், அரசியற்கட்சித் தலைவர்கள், மதத்தலைவர்கள், சமூக அமைப்புப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஜனாதிபதி சந்திரிகாவின் எண்ணக் கருத்துக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அறிவிப்பதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் - வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், தூதுவர் பேணாட் குணதிலக, ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யு ஜே.எஸ்.கருணாரட்ன, சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மிதிவெடியில் சிக்கிய ஹலோ ட்ரஸ்ட் ஊழியர்!

(யாழ்ப்பாணம்)

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் மிதிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலில் பலத்த காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் உரும்பிராய் பகுதியில் இடம்பெற்றது.

நாவாலியைச் சேர்ந்த 26 வயதுடைய ஆர்.பகீரதன் என்பரே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

உரும்பிராய் பகுதியில் உள்ள மூன்று கோயில் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினர் ஈடுபட்டிருந்தனர். இதன்போது மிதிவெடி ஒன்று தவறுதலாக வெடித்ததால் மிதிவெடி அகறறும் பிரிவைச் சேர்ந்த மேற்படி ஊழியர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். (தீ,90)

# பாடசாலையில் மயக்கமுற்ற மாணவி வைத்தியசாலையில்!

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் மயங்கி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டு, மாணவி ஒருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சுயநினைவற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - மிருசுவில் வடக்கைச் சேர்ந்த 16 வயதான எஸ்.விஸ்மலதா என்ற மாணவியே மயக்கமடைந்த நிலையல் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது

யா/மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மேற்படி மாணவியை அவரது பெற்றோரை பாடசாலைக்கு கூட்டிவரும்படி ஆசிரியர் கூறியதற்கமைய மதியம் வீட்டுக்குச் சென்ற மாணவி, பாடசாலைக்குத் திரும்பி ஒரு மணிநேரத்தின் பின்னர் மயக்கமடைந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட இந்த மாணவி மயக்கமான நிலையிலேயே யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவர் தற்போது அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## றெஜி....

புலிகளால் மீட் கப்பட்டிருக்கின்றன.

மீட்கப்பட்ட பாஸ்போர்ட்டில் - றெஜி ஒரு தடவை சிங்கப்பூருக்குச் சென்று திரும்பியதற்கான முத்திரைகள் குத்தப்பட்டிருந்ததாகவும் -

வேறொரு நாட்டுக்குச் சென்று வந்ததற்கான முத்திரைகளும் இதில் இருக்கின்றபோதும், எந்த நாட்டுக்கு என்பது குறித்து தெளிவாக இல்லை என்றும் செய்திகள் தெரிவித்தன.

## சமாதான....

பின்பற்றி வருவதாகவும் கொபி அனானுக்கு ஜனாதிபதி சந்திரிகா எடுத்துக் கூறியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஐ.நா.பொதுச் சபையின் 60 ஆவது கூட்டத தொடரில் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொள்ளவேண்டும் என்று கொபி அனான் அழைப்பு விடுத்ததாகவும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# றொறொன்ரோவில்...

வீச ஆரம்பித்துவிடும் என்பதால், திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் மக்களின் வசதியைக் கருத்திற்கொண்டு, நிகழ்வுகள் நேரத்தோடு ஆரம்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பிரமுகர்களின் சிறப்புரைகளும், புரட்சி நடனங்கள், உரைச்சித்திர நிகழ்வுகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் மூலம் வருகை தரவுள்ள கனேடிய தமிழ்மக்களை தமிழுணர்வில் கலக்கவைக்க ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இராணிப் பூங்காவிற்கு வருகை தரும் தமிழ் மக்கள், இறுதிநேரம் வரை காத்திருக்காது, நேர காலத்தோடு பூங்காவை அடைந்தால், எதுவித மக்கள் இடிபாடுகளையும் உருவாக்காது, மேடைக்கு அருகே சென்று நிகழ்வுகளை முழுமையாகப் பார்தது ரசிக்க வாய்ப்பு உருவாகும் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை - கனடாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வை முன்னிட்டு, யாழ். குடாநாட்டிலுள்ள பொதுஅமைப்புக்கள் பலவும் செய்திகளை அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

துஷா பல் மூக்குக் கண்ணாடியகம்



- சிறந்த சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
- மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்
- இலவச கண் பரிசோதனை செய்துகொள்வதற்கும்
- முகப் பொலிவுக்கேற்ப மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்வதற்கும்
- வேறு எங்காவது பல்கட்டி, கிளிப்போட்டு திருப்தி அடையாதவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
துஷா பல் மூக்குக் கண்ணாடியகம்
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-3179) T.P: 021 222 3461

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.